நவம்பர் 08, 2020

# இலக்கு

இதழ் 103

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1



## நினைவேந்தும் பாரம்பரியம் நீர்த்துப் போகுமா?



## அமெரிக்க அதிபர் தேர்தலில் பைடன் வென்றார்


துணை அதிபர் ஆகின்றார் கமலா ஹாரிஸ்




ஆர்வலன்

## சிங்கள பௌத்த மயமாகும் வவுனியா வடக்கு அன்று கச்சல்சமணங்குளம் இன்று சபுமல்கஸ்கட..!

## கொரோனாவில் இருந்து விடுபட வேண்டுமா? பாரம்பரிய வாழ்க்கை முறைக்குத் திரும்புங்கள்



வைத்திய கலாநிதி த.காண்டீபன்



## கொழும்புத் துறைமுக கிழக்கு முனையம் இந்தியாவின் கைகளுக்கு செல்கின்றது

அகிலன்



## 7 தமிழர்கள் விடுதலை என்பது இம்முறையும் தேர்தல்கால வாக்குறுதிகளில் ஒன்றாகுமா?

கல்யாணி



## விசமில்லா விவசாயம்

விதுஜா.வேலம்புராசன்

மூன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு, சமூகவியல் துறை கலைப்பீடம்

## சைப்பிரஸ் சிக்கலில் ஓர் புதிய திருப்பம்

தமிழில் ஜெயந்திரன்



## கொரோனா நெருக்கடியும் கைநழுவிய போக்கும்

பி.மாணிக்கவாசகம்

## இலங்கையில் அதிகரிக்கும் கொரோனா –அதிக மரணங்கள் கொழும்பில் பதிவு



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் இதுவரையில் 34 மரணங்கள் பதிவாகியுள்ளன. இந்த 34 மரணங்களில் கடந்த 8 நாட்களில் 14பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் உலக அளவிலான பாதிப்பு, ஐந்து கோடியே 68 ஆயிரத்து 493 ஆக பதிவாகியுள்ளது.

இதேவேளை, இதுவரை கொரோனா தொற்றினால் ஏற்பட்ட உயிரிழப்புக்களின் மொத்த எண்ணிக்கை 12 இலட்சத்து 54 ஆயிரத்து 411ஆக அதிகரித்துள்ளதோடு, இதுவரை மூன்று கோடியே 54 இலட்சத்து 80ஆயிரத்து 358 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இலங்கையில் முதலாவது கொரோனா வைரஸ் தொற்றாளர் இனங்காணப் பட்டதிலிருந்து ஜூலை மாதத்தில் மட்டும் எந்த மரணமும் பதிவாகவில்லை என்று கூறப்படுகின்றது.

அதேநேரம், நாட்டில் அதிகளவில் ஆண்களே கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. இதுவரையில் 18 ஆண்களும் 16 பெண்களும் கொரோனா பாதிப்பினால் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தோர் 19 வயது தொடக்கம் 88 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாரவில, கொச்சிக்கடை, மருதானை, ஹோமகம, தெஹிவளை, கல்கிசை, பொல்பிதிகம, முகத்துவாரம், திருகோணமலை, மாவத்தகம, நுகே கொடை, குளியாபிட்டி, கொம்பனிவீதி,

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## பெயர் தெரியா மாவீரர்களுக்கு பிரித்தானிய மகாராணி அவர்கள் அளித்த முக்கியத்துவம்



பெயர் தெரியா மாவீரர் துயிலகத்தில் வீரவணக்கம் செய்யும் பிரித்தானிய மகாராணி அவர்கள்

**நன்றி : https://www.bbc.co.uk/news/uk-54856877**

கடந்த புதன்கிழமை, 04.11.2020 அன்று பிரித்தானியாவின் மாட்சிமைக்குரிய மகாராணி 2ஆவது எலிசபெத் அவர்கள் 1ஆவது உலகப் பெரும் போரின் 'பெயர் தெரியா மாவீர்களின்' நூற்றாண்டை முன்னிட்டு, 'கொரோனா' தொற்று மிக அதிகமாக உள்ள நிலையையும் பொருட் படுத்தாது,தனது 94ஆவது வயதில், முதன் முறையாக தொற்றைத் தடுக்கும் முகக்

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

## தமிழினத்தின் விடுதலைக்கு இந்தியாவின் தலையீடு அவசியம் – மாவை.



தமிழினத்தின் விடுதலைக்கு, தமிழ்த் தேசத்தின் பாதுகாப்புக்கு இந்தியாவின் தலையீடு அவசியம் என்ற அடிப்படையில் அவர்கள் அக்கறையைச் செலுத்தியுள்ளதை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

"கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அரசியல், இராஜதந்திர நகர்வுகள் மிகத் தீவிரமாக இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. சீனாவின் தலையீடுகள், அதற்கு எதிரான நாடுகளின் தலையீடுகள், இந்தியாவின் உரித்து, இந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பில் தங்கி யுள்ளது என்பதில் அவர்கள் அக்கறையாகவுள்ளனர்.

இலங்கையின் பாதுகாப்பு, குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களின் பாதுகாப்பு, இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகமுக்கியமானதாக இருக்கும். இருக்கின்றது என்றெல்லாம் அவர்கள் கருதுவதால், கூடிய அக்கறை செலுத்துவதாக செய்திகள் மூலம் அறிய முடிகிறது.

ஆனபடியால், இந்தியாவின் தலையீடு இனத்தின் விடுதலைக்காகவும் தமிழ் மக்களுடைய, தமிழ்த் தேசத்தின் பாதுகாப்புக்காகவும், அவர்களுடைய அக்கறையைச் செலுத்தியுள்ளதை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம். ஏற்கனவே அவ்வாறு பல விடயங்களைப் பேசக் கூடியதாக இருந்திருக்கிறது. அப்படி மறுபடியும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் இந்திய அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட விரும்புகின்றோம்.

அது இந்திய அரசாங்கத்தின் ஒரு தேவைப் பாடாகவும், எங்களுக்கு அதிக தேவைப்பாடாகவும், ஒரு நிகழ்ச்சி நிரலாகவும் இருக்கிறது. எனவே, அவ்வாறான பேச்சு இடம்பெறவேண்டும் என நாங்களும் விரும்புகின்றோம்" என்றார்.

## நாம் ஒருங்கிணைந்து செயற்பட்டால் கோவிட்டை ஒழிக்கலாம் – ரெட்றோஸ் கெப்ரியேசஸ்

உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயற்பட்டால், கோவிட்-19 நோயை உலகில் இருந்து ஒழிக்க முடியும் என உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் ரெட்றோஸ் கெப்ரியேசஸ் ஜெனீவாவில் கடந்த வெள்ளிக்கிழமை (6) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் நாம் மேற்கொண்ட அவசர அழைப்பை பல நாடுகள் உள்வாங்கிக் கொண்டதுடன், விரைவாக செயற்பட்டுமிருந்தன. பல நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புடன் இணைந்து செயற்பட்டன.

அவர்கள் தமது நடவடிக்கை தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு, தகவல்களை பரிமாறி, தமது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டிருந்தனர். இன்றுவரை 21 நாடுகள் அதனை மேற்கொண்டுள்ளன. ஏனைய நாடுகளும் அதனை பின்பற்றி வருகின்றன. இது நீண்ட கால சுகாதார பாதுகாப்பை வழங்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அனைத்துலக விதிகளை சிறீலங்கா அரசு மதிக்க வேண்டும்
### - இங்கிலாந்து மனித உரிமைகள் அமைப்பு



பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி கைது செய்து தடுத்து வைத்துள்ள மனித உரிமைகள் தொடர்பான வழக்கறிஞர் ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவை, சிறீலங்கா அரசு விடுதலை செய்ய வேண்டும் என இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பகுதிகளுக்கான மனித உரிமைகள் அமைப்பு கடந்த வெள்ளிக்கிழமை (6) வெளியிட்ட அறிக் கையில் தெரிவித்துள்ளது.

சட்டவிதிகளை சிறீலங்கா அரசு மதிப்பதுடன், அனைத்துலகச் சட்ட விதிகளையும் சிறீலங்கா அரசு பின்பற்ற வேண்டும். வழக்கறிஞர் விடுதலை செய்யப்படுவதுடன், துன்புறுத்தல்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

## ஓரணியில் ஜம்மு காஷ்மீர் அரசியல் கட்சிகள்



ஜம்மு-காஷ்மீரின் ஏழு முக்கிய அரசியல் கட்சிகள், மத்திய பிராந்தியத்தில் நடைபெறவிருக்கும் மாவட்ட மேம்பாட்டு கவுன்சில் (டி.டி.சி) தேர்தலில் ஒருங்கிணைந்து போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளன.

நீக்கப்பட்ட ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்த்தை மீட்டெடுப்பதற்காக ஏழு முக்கிய அரசியல் கட்சிகள் இணைந்து குப்கர் கூட்டணி உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

## நடுநிலைமையைக் கடைப்பிடிக்க சிறீலங்கா தீர்மானம்

அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்பாடுகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளபோதும், இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் நடுநிலைமையை கடைப்பிடிக்கத் தாம் தீர்மானித்துள்ளதாக அண்மையில் சிறீலங்காவுக்கு பயணம் மேற்கொண்ட அமெரிக்க வெளிவிவகார செயலாளர் மைக் பொம்பியோவுக்கு சிறீலங்கா அரசு தெரிவித்துள்ளது.

மைக் பொம்பியோவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே சிறீலங்கா அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்சா இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள்சபையின்கடல்விதிகளின் அடிப்படையில் இந்து சமுத்திரப் பிரதேசத்தை நடுநிலமையாக பேணுவதுடன், அணிசேரா கொள்கைகளையும் பின்பற்றப்போவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சிறீலங்கா இராணுவத் தளபதி மீது கொண்டுவரப்பட்டுள்ள பயணத் தடை தொடர்பில் மறுபரிசீலினை செய்யுமாறு சிறீலங்கா அரசு அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## "அமெரிக்கா ஒன்றுபட வேண்டிய நேரம் இது"
**– ஜோ பைடன்**




ஜனநாயக கட்சியின் வேட்பாளர் ஜோ பைடன், அமெரிக்க அதிபர் தேர்தலில் வென்றுள்ளதையடுத்து உரையாற்றுகையில், "வேற்றுமையைக் கோராமல் ஒற்றுமையைக் கோரும் ஒரு அதிபராக நான் இருப்பேன்" என்று உறுதியளித்துள்ளார். மேலும் "இது அமெரிக்கா ஒன்றிணையும் நேரம்" என்றும் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நவம்பர் 3ஆம் திகதி அமெரிக்க அதிபர் தேர்தல் நடந்து முடிந்தது. ஆனால் வாக்கு எண்ணிக்கைகள் தொடர்ந்து மூன்று நாட்களுக்கும் மேலாக நடைபெற்றன. வெற்றியைத் தீர்மானிக்கும் அதிமுக்கிய மாநிலங்களான *(Battleground states)* பென்சில்வேனியா, ஜோர்ஜியா, அரிசோனா, நிவேடா, வட கரோலினா போன்ற மாநிலங்களில் இழுபறி நீடித்ததால், ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஜோ பைடனுக்கும், குடியரசுக் கட்சி வேட்பாளரான அதிபர் டொனால்ட் ட்ரம்புக்கும் பலத்த போட்டி நிலவியது.

இந்நிலையில், ஜனநாயக கட்சியின் ஜோ பைடன் அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற தேவைப்படும் 270 இடங்களை விட கூடுதலாக 9 இடங்களில் அவர் முன்னிலை பெற்றார்.

மேலும் பென்சில்வேனியாவில் சனிக்கிழமை மாலையில் வாக்கு எண்ணிக்கை முடிவில், பைடனுக்கு சாதகமாக வெற்றி வாய்ப்பு உறுதியாகியுள்ளது.

அதே நேரம், ஜோ பைடனின் அரசில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கறுப்பின பெண்ணான கமலா ஹாரிஸ், முதல் துணை அதிபராக தெரிவாகியுள்ளார்.

தனது தேர்தல் வெற்றி குறித்து உரையாற்றிய ஜோ பைடன்,
"இந்த தேசத்தின் மக்கள் தங்களது எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள் நமக்கு தெளிவான ஒரு வெற்றியை தந்துள்ளனர், நீங்கள் என் மீது வைத்த நம்பிக்கைக்கும் உறுதிக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன். வேற்றுமையை கோராமல், ஒற்றுமையைக் கோரும் ஒரு அதிபராக நான் இருப்பேன்.

சிவப்பு நிற மாகாணங்கள், நீல நிற மாகாணங்கள் என்றில்லாமல், பல மாகாணங்கள் ஒன்றிணைந்த அமெரிக்காவாக நான் பார்ப்பேன். நான் இந்த பதவிக்கு வந்ததற்கு காரணம், அமெரிக்காவின் ஆன்மாவை மீட்டெடுக்கவும், இந்த நாட்டின் முதுகெலும்பான நடுத்தரவர்க்க மக்களை மறுகட்டமைக்கவும், மீண்டும் அமெரிக்காவை அனைவரும் மதிக்கும்படியும், நாட்டில் ஒற்றுமையை உருவாக்கவும்தான். எனது இந்த நோக்கத்திற்காக எனக்கு வாக்களித்த மக்களுக்கு நான் வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டுள்ளேன். ஒவ்வொருக்கும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். கசப்புகளை ஒதுக்கி வைத்து, ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வோம். நமது எதிர்த்தரப்பினரை எதிரிகளாக நடத்துவதை நிறுத்துவோம். எனது முதல் பணி கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதுதான்." என்றார்.

இதைத் தொடர்ந்து கமலா ஹாரீஸ் தனது உரையில், "நீங்கள் நம்பிக்கையை தெரிவு செய்தீர்கள். ஒற்றுமையை, கண்ணியத்தை, அறிவியலை, உண்மையை தெரிவு செய்தீர்கள். அதனால் நீங்கள் பைடனை தெரிவு செய்தீர்கள்" என்று வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் அமெரிக்க அதிபராக ஜோ பைடன் முறைப்படி பதவியேற்பார். தற்போது பைடனுக்கு 77 வயதாகிறது. மிக அதிக வயதில் அமெரிக்க அதிபராக பதவியேற்கும் பெருமை அவருக்கு கிடைக்க உள்ளது.

அதே நேரம், வெற்றி பெற்ற ஜோ பைடனுக்கு உலகத் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், தேர்தலில் முறைகேடு நடந்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ள டிரம்ப் தரப்பு, பல மாகாணங்களில் வழக்கு தொடுத்துள்ளது. ஏற்கனவே அவற்றுள் சில வழக்குகள் தள்ளுபடியாகியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் புதிய ஆட்சி மாற்றத்துள் ஈழத்தமிழர் உரிமைகளை மீட்டெடுத்தல்

**ஐக்கிய அமெரிக்க அரச தலைவர் தேர்தலில் ஜோ பைடன் அவர்களுக்குக் கிடைத்த வரலாறு காணாத பெருவெற்றியை சனநாயகத்தின் வெற்றியாகக் கருதி, இலக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.**

**அடுத்து கமலா ஹாரிஸ் அவர்கள், அமெரிக்க வரலாற்றிலேயே முதற்தடவையாக வெள்ளை மாளிகையில் துணை அரசத் தலைவராகப் பதவிப்பொறுப்பேற்கும் பெண் - தெற்காசிய வழிவந்த முதல் பெண் - ஆபிரிக்க ஆசிய அமெரிக்கப் பெண் - குடிவரவானவரின் மகளாக உள்ள பெண் - வெள்ளை நிறமல்லாத பெண் என்னும் பல வரலாற்றுச் சாதனைகள் படைத்த நிலையில் தெரிவாகியுள்ளார். அவரின் இந்த அனுபவங்களுடனான அரசியல் பயணம் என்பது பெண்ணுரிமை - தெற்காசிய அமைதி - ஆசிய ஆபிரிக்க அமெரிக்க மக்கள் உரையாடல் - குடிவரவுப் பிரச்சினைகளுக்கான நியாயமான தீர்வுகள் என்பதை ஏற்படுத்தும் என்பது எதிர்பார்ப்பு. இந்த வியக்கத்தகு மாற்றத்தை ஏற்படுத்திய அவருக்கு, அவரின் தாயார் தமிழகத்தைச் சேர்ந்தவர் என்ற உரிமையுடன் இலக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறது. அதேவேளையில், இந்த உரிமை தரும் தமிழர்கள் குறித்த அவரின் கடமைகளையும் அவர் நிறைவேற்ற வேண்டுமெனவும் வேண்டுகிறது.**

**"நான் சிவப்பு, நீல நிற மாநிலங்களாக அல்ல, ஒன்றுபட்ட ஐக்கிய அமெரிக்க மாநிலங்களாகவே அமெரிக்காவைப் பார்க்கிறேன்" என்னும் ஜோ பைடன் அவர்களின் வெற்றியுரை, அமெரிக்கா தனது மாநிலங்களை ஒன்றுபடுத்தும் அரசியல் நடவடிக்கைகளுக்கே, எதிர்வரும் காலங்களில் முன்னுரிமை கொடுக்கும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த அமெரிக்க ஒருமைப்பாடு என்பதன் பின்னணியிலேயே அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கை தொடரும் என்பது எதிர்பார்க்கப்படுகிற ஒன்றாக அமைகிறது.**

**இந்நேரத்தில் ஈழத்தமிழர்களுக்கு அவர்களது தேசியத்தை முன்னெடுக்க வேண்டுமென்னும் அவர்களின் அரசியல் ஆன்மாவை 18ஆம் நூற்றாண்டிலே அமெரிக்கர்களே வடக்கில் முதலில் மானிப்பாயில் டாக்டர் கிரீன் அவர்களின் குழுவினரால் தமிழால் மருத்துவக்கல்வியைக் கற்பித்துத், தமிழ்மொழி மூலமாக மருத்துவர்களை உருவாக்கியும், அறிவியல் நூல்களைத் தமிழில் மொழியெர்த்து வெளியிட்டும் ஊடகங்களைத் தமிழில் தொடங்கியும் தோற்றுவித்தனர். என்பதை மீள்நினைவுகூர விரும்புகின்றோம். அக்காலத்து காலனித்துவ, பிரித்தானிய அரசின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலேயே அமெரிக்கர்கள் ஈழத்தமிழர்களுக்கான வைத்திய மற்றும் கல்விச் சேவைகளைத் தொடங்கி, அவர்களது அரசியல் ஆன்மா கட்டமைக்கப்பட உதவினர். அன்று முதல் இன்று வரை ஈழத்தமிழர்களின் நவீன கல்வி வளர்ச்சிக்கு அமெரிக்கர்கள் ஆற்றி வரும் பணிகள் பல. இந்த அமெரிக்க ஈழத்தமிழர் இடையான தொன்மையும் தொடர்ச்சியுமான நேரடி உறவாடலை ஜோன் பைடன் அவர்கள் அரசியலிலும் தொடங்க வேண்டும். இது அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையில் இந்துமா கடல் அமைதி, பாதுகாப்பு - பசுபிக்கடல் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்த இலங்கைத் தீவில் இந்துமா கடலின் பெரும்பகுதியைத் தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள ஈழத்தமிழர்களும் தங்களாலான பங்களிப்பை வழங்க வழி செய்யும்.**

**அதே வேளை, "சனநாயகம் ஒரு நிலையல்ல - செயல். அமெரிக்காவின் ஆன்மாவை மீட்டெடுக்க நாங்கள் அதிகம் பணி செய்ய வேண்டியுள்ளது" என்பதைத் துணை அரசத் தலைவர் கமலா ஹாரிஸ் அவர்கள் தனது உரையில் தெரிவித்துள்ளார். இந்தப் புதிய அனுகுமுறையில் அமெரிக்காவின் அரசியல் ஆன்மாவை வடிவமைத்த அமெரிக்கத் தலைவர்கள் வலியுறுத்திய மக்களின் பிறப்புரிமையாம் தன்னாட்சி உரிமையும், சிறுதேசியங்களின் பாதுகாப்பும், உலக மக்கள் அனைவருக்கும் கிட்டச் செய்ய வேண்டும் என்னும் உறுதிமொழியையும் இணைத்துக் கொண்டாலே, அமெரிக்க ஆன்மாவை மீட்டெடுத்தல் என்பது முழுமையாகும்.**

**கமலா ஹாரிஸ் அவர்களின் தெரிவால் இதுவரை இராணுவ, பொருளாதார நல்லுறவாக அமைந்த இந்தோ அமெரிக்க உறவு இனி அரசியல் நல்லுறவாகவும் தொடரும். இந்த புதிய சூழலில் ஈழத்தமிழர்கள் குறித்த கொள்கை வகுப்பை ஈழத்தமிழர்களையும் இணைத்து வகுத்தாலே இந்தியாவும், அமெரிக்காவும் எதிர்பார்க்கும் இந்துமா கடல் அமைதி என்பது விரைவுபடும் என்பது எதார்த்தம்.**

**இந்நேரத்தில் இந்தியா எதிர்பார்ப்பது போல, ஈழத்தமிழர்களின் உரிமைகளை இக்காலத்துக்கு ஏற்ப முன்னெடுக்கக் கூடிய ஆற்றலாளர்களைக் கொண்ட குரல் தரவல்ல ஒரு கட்டமைப்பை ஈழத்தமிழர்கள் உருவாக்கினாலே, அமெரிக்காவின் புதிய ஆட்சி மாற்றத்துள் ஈழத்தமிழர் உரிமைகளை மீட்டெடுத்தல் என்னும் இராஜதந்திர முயற்சிகள் முன்னேற உதவும்.**

**ஆசிரியர்**

# நினைவேந்தும் பாரம்பரியம் நீர்த்துப் போகுமா?

தமிழர் தாயகப் பிரதேசத்தில் இலங்கை அரசால் முன்னெடுக்கப்பட்டு வந்த நில ஆக்கிரமிப்புப் போர், 2009ஆம் ஆண்டு பெரும் தமிழின அழிப்புடன்முடிவுக்குவந்தது. பயங்கரவாதிகளை அழித்து விட்டோம், தமிழ் மக்களை பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்டுவிட்டோம் என அறிவித்த இலங்கை அரசாங்கம், அதன் பின் இன்று வரையிலும் அதே பயங்கரவாத பூச்சாண்டி காட்டி தமிழர் நிலங்களை ஆக்கிரமிப்பதுடன் இன சுத்திகரிப்பு வேலைகளிலும் சத்தங்களின்றி செயற்பட்டு வருகின்றது.

அதே நேரம் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதற்குப் பதிலாக குறுகிய கால சலுகைகளை வழங்கி, தான் ஒரு நல்லரசாக உலகின் கவனத்தில் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள முனைகிறது.

அவ்வாறான சலுகைகளில் ஒன்றுதான் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட நினைவு கூரல் அனுமதிகள். ஆனால் தற்போது அடக்குமுறைக்கு துணைபோகும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பிரிவினைவாதத்தை தூண்டல் அல்லது புலிகளை மீளக்கட்டியெழுப்புதல் நடவடிக்கை என கூறி தனிப்பட்ட நபர்கள், மற்றும் அரசியல்வாதிகளுக்கு எதிராக தடையுத்தரவு பெற்று நினைவுகூரல் நடவடிக்கைகட்கு தடை விதித்தல் மூலம் அடிப்படை மனித உரிமைகளை அப்பட்டமாக தொடர்ந்தும் மீறி வருகிறது.

இந்நிலையில், இந்த விவகாரத்தில் இலங்கை மற்றும் தமிழகத்தில் உள்ள அரசியல் தலைவர்கள், அமைப்புகள் மற்றும் மக்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பது குறித்து ‘இலக்கு’ மின்னிதழ் கண்ட நேர்காணலை இங்கே தொகுத்து வழங்குகின்றோம்.

## தமிழீழம்

# “உலகத்தில் நமது சிக்கல்கள் இன்று முன்னுரிமைப் பட்டியலில் இல்லை”

**மனோ கணேசன்** தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்



“இலங்கையில் தமிழினம் ஒரு தேசிய இனம் என்பது அடிப்படை உண்மை. அது தன் உரிமைகளுக்காக குரல் எழுப்பவும், போராடவும் உரிமை கொண்டது. அடக்குமுறைக்கு எதிராக போராடும் உரிமை உலகமயமானது. சர்வமயமானது. தனி நபர்களும் சரி சமூகங்களும் சரி அந்த உரிமையைக் கொண்டுள்ளார்கள். இது கேள்விக்கு இடமில்லாத உண்மை.

இலங்கைத் தமிழர்களின் போராட்ட வரலாற்றில், மரணித்தோரை நினைவுகூரல்-அவர்கள் பொது மக்களாக இருக்கலாம், போராளிகளாக இருக்கலாம் – மேலே சொன்ன உலகளாவிய உரிமை. ஆனால் தமிழரின் நினைவுகூரலை இன்றைய அரசு தடுக்கிறது. கடந்த நல்லாட்சியில் இந்த விவகாரம் மூர்க்கமாக தடுக்கப்படாமல் படிப்படியாக நினைவுகூரல் நடத்தப்பட சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. ஆனால் உண்மை என்னவென்றால், அப்போதும்கூட இது ஒரு சலுகையாகவே வழங்கப்பட்டது. உரிமையாக அங்கீகரிக்கப்படவில்லை. ஆகவே புது அரசு வந்ததும் சலுகை திரும்பப் பிடுங்கப்பட்டு விட்டது.

தமிழரின் போராளிகள், சிங்கள தென்னிலங்கையை பொறுத்தவரையில், அரசுக்கு எதிராக ஆயுதம்தூக்கிய ‘பயங்கரவாதிகள்’. அதுமட்டுமல்ல போரில் மரணித்த பொது மக்களும் கூட சிங்கள தென்னிலங்கையை பொறுத்தவரையில் அரசுக்கு எதிரான ஆயுத நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய ‘பயங்கரவாதிகள்’. இதுதான் தெற்கின் கசப்பான யதார்த்தம்.

இங்கே விசித்திரம் என்னெவென்றால், இதேமாதிரி அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கிய ஜேவிபி தெற்கில் பயங்கரவாதிகளாக கருதப்படுவதில்லை. ஜேவிபியினர் மரணித்த தமது சிங்களப் போராளிகளை பகிரங்கமாக ஆண்டு தோறும் ஏப்ரல், நவம்பர் மாதங்களில் நினைவு கூருகின்றார்கள். கடைசியாக கடந்த 2019ஆம் வருடம் இதே நவம்பர் 13ஆம் திகதி, தென் மாகாணத்தின் காலி நகரில் சவோதா மண்டபத்தில் ஜேவிபியின் தலைவர் நண்பர் அனுரகுமார திசாநாயக்க, செயலாளர் நண்பர் டில்வின் சில்வா ஆகியோர் உள்ளிட்ட எல்லா தலைவர்களும், ஆதரவாளர்களும் கூடி ரோஹன விஜேவீர உட்பட கொல்லப்பட்ட தம் எல்லா போராளிகளையும் உணர்வுபூர்வமாக நினைவு கூர்ந்தார்கள்.

இந்த வருடமும் இதோ இந்த நவம்பரில் நினைவு நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். ஜேவிபி மட்டுமல்ல அதிலிருந்து பிரிந்த முன்னிலை சோஷலிச கட்சியும் நினைவு நிகழ்ச்சிகள் நடத்தும் என நினைக்கிறேன். ஆரம்பத்தில் விமல் வீரவன்ச கட்சியும் நடத்தியதாக நினைக்கிறேன்.

ஆனால் தென் மாகாணத்தில் நடத்தப்படும் சிங்கள ‘போராளி’ நினைவுகூரல்கள் தேசிய மட்டத்தில் சர்ச்சையைக் கிளப்புவதில்லை. ஆனால் வடக்கு அல்லது கிழக்கு மாகாணங்களில் நடத்தப்படும் தமிழ் ‘போராளி’ நினைவு கூரல்கள், ‘பயங்கரவாதிகள் நினைவுகூரப்படுகிறார்கள்’ என்ற தலைப்பில் தேசிய ரீதியாக பெரும் சர்ச்சைகளைக் கிளப்புகின்றன.

வடக்கின் மிருசுவில் கிராமத்தில் பச்சிளம் குழந்தைகள் உட்பட அப்பாவி பொதுமக்களை வெட்டி, கொத்தி படுகொலை செய்து இலங்கை நீதிமன்றத்தாலேயே விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்டு, தண்டனை பெற்று சிறையில் இருந்த இராணுவச் சிப்பாய் இரத்நாயக்க, ஜனாதிபதியின் பொது மன்னிப்பைப் பெற்று தன் சொந்த வீட்டுக்கு போய், தான் கழுத்தை வெட்டி கொலை செய்த குழந்தையின் வயதை ஒட்டிய தனது சொந்த மகளை மடியில் வைத்து கொஞ்சும் காட்சியை ‘தேசியவீரர் வீடு வந்து விட்டார்’ என தலைப்பிட்டு ஊடகங்களில் பிரசுரித்து பார்த்து மகிழும் நாடு இதுவாகும். இதைவிட எதை சொல்ல?

எனது தொகுதி கொழும்பில் ரோயல் பார்க் என்ற மேல்தட்டு மக்கள் வசிக்கும் குடியிருப்பில் இலங்கையின் மிகப்பிரபல கோடீஸ்வர சட்டத்தரணியின் உதவாக்கரை மகன் தன் காதலியை அடித்தே கொலை செய்து, தண்டனை பெற்று, சிறையில் இருந்தார். அவரும் முன்னாள் ஜனாதிபதியால் விடுவிக்கப்பட்டார். இப்போது கொலைக் கைதியான பிரபல ஊடக நிறுவன அதிபரின் சகோதரர் விடுவிக்கப்படப் போகிறார். தடுப்பில் இருந்த இன்னமும் பல சிப்பாய் சந்தேக நபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். இன்னமும் பலர் வெளியே விடப்படப் போகிறார்கள்.

இதில் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், இந்த கிரிமினல் படுகொலையாளிகளுக்கு கொடுக்கப்படும் அங்கீகாரத்தின் ஒரு சிறு விகிதம் கூட மரணித்த அல்லது உயிருடன் இருக்கும் தமிழ் போராளிகளுக்கு, போரில் மறைந்த தமிழ் உடன்பிறப்புகளுக்கு, சிங்கள மக்கள் மத்தியில் வழங்கப்படுவதில்லை. இதுதான் தென்னிலங்கை யதார்த்தம்.

தென்னிலங்கையின் சிங்கள மனித உரிமை சமூகத்தில் ஒரு கையளவு நேர்மையாளர்களைத் தவிர வேறு எவரும் அப்பாவி மக்களை கொலை செய்த இராணுவச் சிப்பாய் ரத்நாயக்க பொது மன்னிப்பில் விடுவிக்கப்படும் போது எதிர்க்குரல் எழுப்ப வில்லை. ஆகவே இவர்களைப் பற்றி நமது தமிழ் அரசியல்வாதிகள் தம்மை பெரிய மனித உரிமைப் போராளிகளாக உருவகித்துக்கொண்டு, அலட்டிக் கொள்வதில் எந்த பிரயோஜனமும் இல்லை. இந்த கிரிமினல் குற்றவாளிகள் வேறு. நமது போராளிகள் வேறு என எனக்கு எவரும் வகுப்பு எடுக்கவும் தேவையில்லை. எனக்கு இது மிக மிக நன்றாக தெரியும். ஆனால் சிங்களத்துக்கு தெரியவில்லையே? அதுதான் பிரச்சினை.

உண்மையில் நாம் எல்லோரும் கூடக்குறைய தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளில் ஒரே குரலில்தான் பேசுகின்றோம். ஆனால் நமது பிரச்சினைகளை பெரும்பான்மை இன அரசியல்வாதிகள் - ஆளும் கட்சியோ, எதிர் கட்சியோ - பேச வேண்டும். சிங்கள சமூகம் பேச வேண்டும். அவர்களை நாம் பேச வைக்க வேண்டும். புரிந்து கொள்ள வைக்க வேண்டும். இதுதான் இன்றைய தேவை. இந்த அடிப்படை உண்மையை புரிந்து கொள்ளுங்கள். இல்லாவிட்டால், எமது பிரச்சனைகளை நாம் பேசிக்கொண்டே இருக்கலாம் தீர்வு வருவது போல தோன்றும். ஆனால் கடந்த அர சில் ரணில் விக்கிரமசிங்க கொண்டுவந்த புதிய அரசியலமைப்பு போன்று அது ஒருபோதும் வராது. வந்தாலும் அரைகுறையாத்தான் இருக்கும். இந்நாட்டில் அந்தளவு பேரினவாதம் ஆழப்பதிந்து உள்ளது. இதுதான் இன்றைய யதார்த்தம்.

இது ஏன்? இதை எப்படி எதிர்கொள்வது என இனியாவது தமிழ் மக்கள் சிந்திக்க வேண் டும். “ஜேவிபி போராளிகளை நினைவுகூர முடிகிறதே. தமிழ் போராளிகளை நினைவுகூர முடியவில்லையே” என நான் சமீபத்தில் சிங்களத்தில் பேசி இருந்த காணொளி ஒன்றை பார்த்து விட்டு எனது சிங்கள முற்போக்கு நண்பர் எனக்கு ஒரு விடயம் சொன்னார். அவர் சொன்ன விடயம் எனக்கும் தெரியும். என் காணொளியிலும் நான் சொன்னதுதான். ஆனாலும் அவர் சொன்னதை அப்படியே இங்கே கூறுகிறேன்.

“மனோ ஜேவிபியின் மீது ஒரு காலத்தில் தடை இருந்தது. இப்போது இல்லை. ஆகவே நினைவு கூருகிறார்கள். புலிகள் மீது இன்னமும் தடை இருக்கிறது. ஆகவே அவர்களை நினவு கூர முடியாதுள்ளது. அதைப் பயன்படுத்தி போராளிகளை மட்டுமல்ல, சாதாரண பொது மக்களை நினைவுகூருவதைக் கூட இந்த இன வாத ஒடுக்குமுறை அரசு தடுக்கிறது. உங்கள் அர சியல் சட்டத்தரணிகளை கொண்டு இலங்கை நீதிமன்றத்தில் புலிகளின் மீதான தடையை நீக்கும்படி கோரி வழக்காடச் சொல்லுங்கள். உடனடியாக தடை நீங்கா விட்டாலும்கூட படிப்படியாக தீர்வு வரும். இதுபற்றி சிங்கள சமூகத்தில் பேசப்படும். இதுதான் இன்று தேவை. உலகின் பல்வேறு நாடுகளில் இதை செய்கிறீர்கள்தானே? புலிகளின் பெயரை பயன்படுத்தி தானே தமிழர்களின் பிரபல ஜனநாயக உரிமைகளை இன்னமும் இந்த அரசு மறுக்

தொடர்ச்சி மறுபக்கம்

## "இலங்கையில் கருத்துச் சுதந்திரம் இல்லை"

**க.வி.விக்னேஸ்வரன்** தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரும், நீதியரசரும்



"இலங்கை அரசின் மனித உரிமை மீறலை, எமக்குச் சாதகமாக எதிர் கொள்ள வேண்டும். இலங்கையில் கருத்துச் சுதந்திரம் இல்லை என்பதை வெளிநாடுகளில் வலியுறுத்த வேண்டும். இவை பற்றி எமது நாட்டின் இராஜதந்திர பிரதிநிதிகளிடம், வெளிநாட்டு அரசாங்கங்கள் கேள்வி கேட்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அவற்றைக் கொண்டு கண்டிக்கச் செய்ய வேண்டும். அவ்வாறே ஐக்கிய நாடுகளும் எம் நாட்டு அரசாங்கத்தை விமர்சிக்க வைக்க வேண்டும்.

எமக்கு அடக்கு முறைக்கெதிராகப் போராடும் உரிமை உள்ளது. நாம் தனித்துவமான இனம், எமது உரிமைகளுக்காகப் போராடும் மக்கள் கூட்டம், அடக்கு முறைகளை எதிர்க்கும் இந் நாட்டின் ஆதிக் குடிமக்களின் வழி வந்தவர்கள் என்று தானே நாம் உரக்கக் கூறி வருகின்றோம்."

## "தொடர்ந்து ஜனநாயக ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்"

**பா.அரியநேந்திரன்** மட்டக்களப்பு மாவட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஸ்ட ஊடகவியலாளரும்

"உயிர்நீத்த எமது உறவுகளை நினைவுகூர முடியாத் தடைகளும், நீதிமன்ற உத்தரவுகளும் தற்போது தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறுகிறது. இவைகள் மனித உரிமை மீறல் என்பதை எல்லோரும் அறிந்தாலும், இலங்கையில் ஆட்சியாளருக்கு எதிராக மனித உரிமை மீறல் தொடர்பான எந்த விடயமும் காத்திரமாக அமைந்ததாக சரித்திரம் இல்லை. அனைத்துலக சமூகத்தின் முன் இந்த விடயங்களை தொடர்ச்சியாக தமிழ்த் தரப்புகள் முன் வைத்த போதும், இலங்கை அரசிக்கு அழுத்தம் கொடுக்ககூடிய சர்வதேச சட்டங்கள் இலங்கையை நோக்கி தாக்கம் செலுத்தும் நிலைமை இன்னும் ஏற்படவில்லை.

ஈழ விடுதலைப் போரில் தம் உயிரை ஆகுதியாக்கிய உறவுகளை அனைத்து தமிழ் உறவுகளும் எந்த நாட்டில் வசித்தாலும் தொடர்ச்சியாக நினைவுகூர்ந்தே வருகின்றனர். ஆனால் இலங்கை நாட்டை பொறுத்த வரையில் ஆட்சியாளர்கள் மாறும்போது அவர்களின் மனநிலையைப் பொறுத்தே இங்கு சட்டங்களும், குறிப்பாக உயிர்நீத்த தமிழ் உறவுகளை நினைவு கூர்வதும் தீர்மானிக்கப்படுகிறது.

உதாரணமாக கடந்த மைத்திரி-ரணில் ஆட்சிக்காலத்தில் உயிர்நீத்த உறவுகளை நாம் நினைவுகூரக்கூடிய ஒருவிதமான சூழ்நிலை இருந்தது. ஆனால் தற்போதைய புதிய ஜனாதிபதியாக கோட்டபாய அவர்களும், பிரதமராக அவரின் சகோதரர் மகிந்தராஜபக்சவும் கொண்ட சகோதர ஆட்சி இடம் பெறும்போது, உயிர்நீத்த எமது உறவுகளை நினைவுகூரமுடியாத் தடைகளும், நீதிமன்ற உத்தரவுகளும் தற்போது எமக்கு எதிராக நடைபெறுகிறது.



இவைகள் மனித உரிமை மீறல் என்பதை எல்லோரும் அறிந்தாலும் இலங்கையில் ஆட்சியாளருக்கு எதிராக மனித உரிமை மீறல் தொடர்பான எந்த விடயமும் காத்திரமாக அமைந்ததாக சரித்திரம் இல்லை.

அனைத்துலகச் சமூகத்தின் முன் இந்த விடயங்களை தொடர்ச்சியாக தமிழ் தரப்புகள் முன்வைத்தபோதும், இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய சர்வதேச சட்டங்கள் இலங்கையை நோக்கி தாக்கம் செலுத்தும் நிலைமை இன்னும் ஏற்படவில்லை

இதற்கு சரியான தீர்வு தமிழ்தேசிய கட்சிகள் புலத்திலும், நிலத்திலும் ஒற்றுமையாக, ஒன்றுபட்டு, ஒரு குரலாக, ஜனநாயக ரீதியான போராட்டங்களையும் அதேவேளை சர்வதேசத்திற்கு அழுத்தங்களையும் தொடர்ச்சியாக செய்வதே நல்லது."

## "மக்கள் மத்தியில் தற்போதைய அரசியல் நிலை பற்றி விழிப்புணர்வு வேண்டும்"

**அருளானந்தம் அனுசன்**
யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர்



நினைவு கூருவது இவ் உலகில் உள்ள அனைத்து மக்களின் உரிமை ஆகும். அந்த வகையில் நாம் அனை வரும் அரசியல் பேதமின்றி இவ் விடயத்தில் ஒன்றுசேரவேண்டும்.

எங்கள் மக்கள் மத்தியில் முதலில் தற்போதைய அரசியல் நிலை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் எங்களில் பலர் அறியாமையில் இருக்கின்றனர்.

இலங்கையில் நடைபெற்ற போர்க்கால சூழலை உலக அரங்கிற்கு கொண்டு சேர்க்க வேண்டும். அது மட்டுமின்றி இந்திய அரசிற்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

## உலகத்தில் நமது ... தொடர்ச்சி...

கிறது? அதை வைத்தே சட்டப்படி தீர்வையும் தேடுங்கள்" என்று என் சிங்கள நண்பர் சொன்னார். இதையே நானும் இங்கே சொல்கிறேன்.

மற்றபடி உங்கள் கேள்வியில் ஒலிக்கும் ஒரு விடயம் தமிழ்நாடு..! அங்கே தமிழ்நாட்டில் இப்போது இலங்கைத் தமிழர் பிரச்சினை ஊடக கிளர்ச்சிப் பிரச்சினையே தவிர உணர்வுரீதியான அரசியல் பிரச்சினை அல்ல. எப்படியும் நண்பர் சீமான் முதலியோர் ஒரு நிகழ்வை சமாந்தரமாக நடத்துவார்கள். அவ்வளவுதான். இப்போது பைடனின் உப ஜனாதிபதி கமலா வந்து தீர்வு தருவார் எனவும் நம்பாதீர்கள். தமிழகம் உட்பட உலகத்தில் நமது சிக்கல்கள் இன்று முன்னுரிமை பட்டியலில் இல்லை. நாம் இங்கே நமது நாட்டில்தான் செயற்பட வேண்டும்."

## "கார்த்திகை வீரர்கள் தினம் நினைவு கூரும் போது, தமிழ் மக்களுக்கு மட்டும் ஏன் இந்தத் தடை"

**எம்.கே.சிவாஜிலிங்கம்** முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இலங்கை தமிழ்த் தேசியக் கட்சி

"தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல உறவுகள் தமது இன்னுயிர்களை தியாகம் செய்துள்ளார்கள். அவர்களை நினைவுகூருவது அடிப்படை உரிமை. இதேபோல இலங்கை அரசுக்கு எதிராக இரு தடவைகள் ஆயதப் போராட்டத்தை முன்னெடுத்த ஜேவிபியினருக்கு அதில் இறந்த போராளிகளை நினைவு கூரும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த வகையில் நவம்பர் 13 ஆம் திகதி கார்த்திகை வீரர்கள் தினம் அனுஸ்டிக்கப்படுகிறது.

அதேபோன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டமும் 2009 ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்டது. அதனடிப்படையில் இறந்தவர்களை நினைவுகூருவதை தடை விதிக்கும் தார்மீக உரிமை மற்றும் நியாயமான காரணம் இலங்கை அரசுக்கு இல்லை. மக்கள் இவ்வளவு காலமும் தொடர்ச்சியாக வீரவணக்கத்தைச் செலுத்தியுள்ளார்கள்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று 10 நாட்களுக்குள்ளே மாவீரர் தினம் வந்ததால், அதை தடுக்க விரும்பாத காராணத்தாலோ, அல்லது தடுக்கக் கூடாது என்ற நினைப்பினாலோ, அதைப்பற்றி சிந்திக்காததாலோ கடந்த முறை நினைவு தினம் தடுக்கப்படவில்லை.

ஆனால் மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தினத்துக்கு பல தடைகள் விதிக்கப்பட்டது. கொரோனா காரணமும் சாட்டப்பட்டது. அதன் பின்னர் தியாக தீபம் திலீபனின் நினைவும் இந்த அரசாங்கத்தால் தடுக்கப்பட்டது.

எனவே எதிர்வரும் 27 ஆம் திகதி வீர மறவர்களுக்கு மக்கள் தங்களின் அஞ்சலியை செய்ய யாரும் தடுக்க கூடாது. மக்கள் இறந்து போன தமது உறவுகளை நினைத்து பொது இடங்கள்,



ஆலயங்கள், வீடுகளில் தீபம் ஏற்றி வழிபடும் உரிமையை மறுப்பது மிகக் கொடூரமானது.

தமிழ் மக்களின் உணர்ச்சிகளை மதித்து, மனிதாபிமானத்துடன் நடக்க வேண்டும். அரசு அதை தடுக்க நினைத்தால் தமிழ் கட்சிகள், தமிழ் தலைவர்கள், பொதுமக்கள் இணைந்து அதற்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். முடிந்தளது அஞ்சலி உரிமையை நிலைநாட்டுவது தான் சிறப்பு.

நியாயமான காரணங்களுக்காக மக்கள் அனைவரும் அடங்க மறுத்து ஆயிரக்கணக்கில் திரண்டால், அரசாங்கத்தினாலோ அல்லது வேறு எந்த சக்தியினாலோ தடுக்க முடியாது. சர்வதேசம் வரை எமது உணர்வுகள் எதிரொலிக்கும் நிலை உள்ளது. ஆகவே ஒவ்வொருவரும் தமது பங்குக்கு ஒன்று சேர்ந்து நினைவை அனுஸ்டிக்க தீர்மானம் எடுப்போமானால், பெரும் வெற்றி ஏற்படும். தாயகத்தில் உயிர் நீத்த உறவுகளுக்காக வீர மறவர்களுக்காக எப்பாடுபட்டாவது அந்த உறுதி உரை நெஞ்சில் ஒவ்வொருவருக்கும் வருமாக இருந்தால், இதை சிறிய பிரச்சினையாக எதிர்கொண்டு நாம் வெற்றி பெறலாம்."

தொடர்ச்சி மறுபக்கம்

## தமிழகம்

# “இலங்கையில் ஜனநாயகம் இல்லை”

**கொளத்தூர் மணி** திராவிடர் விடுதலைக் கழக தலைவர்



தம் இனத்தின் முன்னோர்களுக்கும், தம் இனத்தின் வீரர்களுக்கும், அவர்கள் மறைவுக்குப் பின்னர் அவர் தம் பணிகளை நினைவுகூர்ந்து மரியாதை செலுத்த நடுகல் நாட்டுவது தமிழினத்தின் ஓர் சீரிய மரபாகும்.

நடுகல்லே அன்றி “நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே” என்று புறநானூறு கூறுகின்றது.

தம்முயிரைக் கருதாமல் மக்கள் நல்வாழ்வுக்கு, அமைதியான, கண்ணியமான சுதந்திர வாழ்க்கை வாழ்வதற்கு இன்னுயிர் ஈந்த மாவீரர்களுக்கு தங்களது நன்றிகளைக் காட்ட, மரியாதை செலுத்த அவர் தம் கல்லறையில் கூடுவது என்பது மானுட குலத்திற்கு உள்ள ஒரு பண்புமாகும்.

அதன் அடிப்படையில்தான் ஈழத்திலும் மக்களின் உரிமை வாழ்வுக்கு உயிரிழந்த மாவீரர்களை நினைவுகூர்ந்து தமது நன்றியை, தமது மரியாதையைச் செலுத்த உருவாக்கப்பட்ட நாள் தான் மாவீரர் நாள் ஆகும்.

உலக நாடுகள் அனைத்திலும், எந்த தடை சட்டங்கள் நடைமுறையில் இருந்தாலும், மத ஊர்வலங்களுக்கும், திருமண ஊர்வலங்களுக்கும், இறுதி ஊர்வலங்களுக்கும் விதிவிலக்கு அளித்தே தான் நடைமுறைப்படுத்தப்படும்.

ஆனால் ஒரு ஜனநாயக நாட்டில் தமது நன்றி உணர்வைக் காட்ட ஒன்று கூடுவதற்கு கூட தடை விதிப்பது என்பது சிங்கள-பௌத்த பேரினவாதத்திற்கு மட்டுமே உள்ள ஆணவமாகவே இந்த தடை ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

எங்கள் கொளத்தூர் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் பயிற்சி எடுத்த புலியூரில் எல்லா பயிற்சிப் பாசறைகளுக்கும் பொறுப்பாக இருந்த லெப்.கேணல் பொன்னம்மான் நினைவாக நாங்கள் எழுப்பிய ஒரு நினைவுக் கூடம் 1990ஆம் ஆண்டு தான் திறக்கப் பட்டது.

1991ம் ஆண்டு ராஜீவ் காந்தி படுகொலை நிகழ்ந்தது. ராஜீவ் படு கொலையில் தமிழ்நாட்டில் பல்வேறு தடை ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இருந்தபோதும்கூட, நாங்கள் பொன்னம்மான் நினைவு கூடத்திற்கு முன்னர் ஒன்று திரண்டு நடத்துகிற அந்த மாவீரர் நாளை தடைசெய்யவில்லை.

அத்தோடு செல்வி ஜெயலலிதா முதல் முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற ஆண்டு அது. புலி ஆதரவாளர்களைத் தேடித்தேடி கைது செய்தனர் என்ற போதிலும், மாவீரர்நாளை அனுசரிப்பதை தடை செய்யவில்லை. ஆனால் இலங்கை அரசு இந்த நினைவுகூரல் தடை ஊடாக ஜனநாயகத்தை முற்று முழுதாகவே குழி தோண்டிப் புதைக்கின்றதைத்தான் நாம் உணர்கின்றோம்.

எது எப்படி இருந்தாலும், தமிழ்நாட்டில் நாம் ஆண்டுதோறும் முன்னெடுக்கின்ற மாவீரர் நாள் நிகழ்வுகளை விட கூடுதலாகவும் பல்வேறு இடங்களிலும் அதை நடத்துவதன் வழியாக தமிழ் இனத்தின் விடுதலைக்கு தம் இன்னுயிரை ஈந்த அந்த மாவீரர்களுக்கு உரிய வகையில் மரியாதை செலுத்துவோமாக!

## சர்வதேச அழுத்தம் கொடுக்க வேண்டும்

**ஆதி** சட்டத்தரணி, சமூக செயற்பாட்டாளர் தமிழகம்

“இலங்கை அரசாங்கம் தொடர்ந்து மக்களின் உணர்வுகளை மதிக்காமல், போரில் இறந்து போன தமது உறவுகளை நினைவுகூர தடை விதித்து வருகிறது. போரில் இறந்து போன உறவுகளை நினைவு கூருவதன் வழியில் தமிழீழக் கோரிக்கைக்கு புத்துணர்ச்சி ஊட்டப்படுவதாக இலங்கை அரசு அஞ்சுகின்றது. இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளின் கவனத்திற்கு இவ்விடயத்தை எடுத்துச்சென்று, இலங்கை அரசின் தமிழர் விரோத போக்கை கைவிட வலியுறுத்த வேண்டும். இங்குள்ள தமிழ் தேசிய அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்துவன் மூலம் இலங்கை அரசை நெருக்கடிக்கு உள்ளாக்கித் தமிழர் விரோத நடவடிக்கையிலிருந்து பின்வாங்க வைக்க முடியும்.”

# “இலங்கையில் மட்டும் அல்ல தமிழகத்திலும் நெருக்கடிகள் உள்ளது”

**மு.அசீப்** ஊடகவியலாளர்



போர் முடிந்த சில ஆண்டுகள் தமிழகத்தில் நினைவேந்தல்கள் பெரிய அளவில் நடத்தப்பட்டன. தமிழ் தேசிய மற்றும் பெரியாரிய அமைப்புகள் மட்டுமே முன்னின்று அவற்றை நடத்தின. அரசியல்கட்சிகள் அதில் பார்வையாளர்களாகவே பங்கேற்றனர். ஜல்லிக்கட்டு போராட்டத்திற்குப் பிறகு, மக்கள் பெரிய அளவில் ஒரு இடத்தில் கூடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழகத்தில் பெரிய அளவில் நினைவேந்தல் கூட்டங்கள் நடத்தப்படவில்லை. போரில் மாண்ட நமது உறவுகளுக்கு நினைவேந்தல் நடத்த இலங்கையில் மட்டும் நெருக்கடி இல்லை, தமிழகத்திலும் உள்ளது. ஆகவே, நினைவேந்தல் நடத்தும் உரிமையை தமிழக முற்போக்கு அமைப்புகள் ஒன்றிணைந்து மீட்டெடுக்கும் பட்சத்தில், ஈழத்தமிழர்கள் அந்த உரிமையை பெறுவதற்காக நடத்தும் போராட்டம் ஊக்கம் பெறும்.

## பெயர் தெரியா ... தொடர்ச்சி...

கவசம் அணிந்து, வெஸ்ட்மினிஸ்ரர் குருமட ஆலயத்தில் உள்ள பெயர் தெரியா மாவீர்களின் துயிலகத்திற்குச் சென்று மலர்வளையம் சாத்தி வீரவணக்கம் செய்துள்ளார்.

இந்த நிகழ்வு மூலம் ஒரு தேச மக்கள் தங்கள் வாழ்வுக்காக தங்கள் இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீர்கள் உடைய பெயர் தெரியாத நேரத்திலும் அவர்களை நினைந்து எத்தனை நூற்றாண்டானாலும் எழுந்து நிற்பர் என்னும் உண்மையினை மாட்சிமைக்குரிய மகாராணி அவர்கள் உலகின் முன் தெட்டத் தெளிவாக நிரூபித்துள்ளார்.

இந்த பெயர் தெரியா மாவீர்களுக்கான வெஸ்ட்மினிஸ்ரர் குருமட ஆலயத் துயிலகத்தில் 1923ஆம் ஆண்டு இந்த வழக்கத்தை மகாராணியாரின் தாயார் தொடக்கி வைத்த பின்னர், இதே குருமட ஆலயத்தில் 1947இல் தனது திருமணத்தைச் செய்து கொண்ட மகாராணி அவர்கள் தன்னுடைய திருமணத்தன்று தனக்களிக்கப்பட்ட மலர்க்கொத்தை ஒத்த மலர்க்கொத்து ஒன்றை உருவாக்கச் செய்து அதனையே இந்த பெயர் தெரியா மாவீர்கள் துயிலகத்தில் கொண்டு சென்று வைத்துள்ளார். இது மாவீர்களைத் தங்கள் குடும்பத்தவராகவே தேச மக்கள் கருதுவர் என்ற மன நிலையை வெளி ப்படுத்தி உள்ளது.

ஈழத்தமிழ்மக்கள்தங்களின்மாவீரர்களை நினைந்து எழும் கார்த்திகை மாதத்தில் பிரித்தானிய மக்களின் தேசத்தலைவி அவர்கள் பெயர் தெரியா மாவீர்களுக்கு அளித்துள்ள இந்த அதிஉயர் மதிப் பளிப்பு மாவீர் மாதமாக ஈழத்தமிழ் மக்கள் கார்த்திகையை அமைத்ததின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தியுள்ளது. ஏந்த ஒரு தேசத்தையும் மாவீர்கள் நினைவேந்தியே மக்கள் கட்டியெழு ப்புவர் அவர்கள் நினைவினையே காலமெல்லாம் போற்றுவர் அவர்கள் இலட்சியங்களையே தங் கள் இலட்சியங்களாகக் கொண்டு வாழ்வர் என்பதை மாட்சிமைக்குரிய மகாராணியவர்கள் பெயர் தெரியா மாவீர்களுக்கு அளித்துள்ள இந்தப் பெருமதிப்பு உலகிற்கு மீளவும் உறுதிப்படுத்தியுள்ளது.

## ஓரணியில் ஜம்மு ... தொடர்ச்சி...

இந்நிலையில், வெற்றிடமாக உள்ள பதவிகளுக்குத் தேர்தல் டிசம்பர் மாதத்தில் எட்டு கட்டங்களாக நடைபெறப் போவதாக ஜம்மு–காஷ்மீர் தேர்தல் ஆணையம் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து குப்கர் கூட்டணியின் செய்தித் தொடர்பாளர் சஜாத் கனி லோன் கூறுகையில், “நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக, வரவிருக்கும் டி.டி.சி தேர்தல் இருக்கிறது. இந்தத் தேர்தலை நாங்கள் ஒற்றுமையாகச் சந்திப்போம் என ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது” என்றார்.



# கொழும்புத் துறைமுக கிழக்கு முனையம் இந்தியாவின் கைகளுக்கு செல்கின்றது

**அகிலன்**

இலங்கையில் கொரோனா பரவல் தீவிரமடைந்து, தலைநகர் கொழும்பை உள்ளடக்கிய மேல் மாணத்தில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப் பட்டிருந்த பின்னணியில், முக்கியமான இராஜதந்திர நகர்வு ஒன்றை கோட்டாபய ராஜபக்ச அரசாங்கம் மேற்கொண் டிருக்கின்றது. நீண்ட காலமாகவே சர்ச்சைக்குரிய ஒன்றாக இருந்து வந்த கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் உடன்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவின் இலங்கை விஜயத்தின் தொடர்ச்சியாகவே இதற்கான முடிவை கொழும்பு எடுத்திருப்பதாகத் தெரிகின்றது. இலங்கையில் அதிகளவில் காணப்படும் சீனாவின் ஆதிக்கம் தொடர்பில், கடும் தொனியில் மைக் பொம்பியோ தெரிவித்த கருத்துக்கள், இந்தியாவின் உணர்வுகளைப் பெருமளவுக்குப் பிரதிபலிப்பதாகவே அமைந்திருந்ததாக கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம்.

அதன் தொடர்ச்சியாகவே புதுடில்லியைச் சாந்தப்படுத்தும் ஒரு செயற்பாடாக கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தத்தை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கும் முடிவை கொழும்பு எடுத்திருப்பதாகத் தெரிகின்றது. சீனாவின் ஆதிக்கத்தை சமப்படுத்தும் ஒரு முயற்சியாக இந்த நகர்வை கொழும்பு மேற்கொண்டிருந்தாலும், புதுடில்லியும், அமெரிக்காவும் இதனால் சாந்தமடையுமா என்ற முக்கி யமான கேள்வி உள்ளது.

### கைச்சாத்தான உடன்படிக்கை



கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் கைச்சாத்திட்டிருந்தபோதும், அந்தத் திட்டம் இதுவரை செயற்படுத்தப்படாத நிலைதான் இருந்தது. கொழும்பில் இடம்பெற்ற ஆட்சி மாற்றங்களும், அரசியல் குழப்பங்களும்தான் இதற்குக் காரணம்.

2015ஆம் ஆண்டு 500மில்லியன் டொலர்களில் இத் திட்டத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. 2016ஆம் ஆண்டு மைத்திரி- ரணில் அரசாங்கதில் உருவான குழப்பங்களினால் அது கைவிடப்பட்டிருந்தது. அதனைச் செயற்படுத்தப் போவதில்லை என அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாகவே அறிவித் திருந்தார். ஆனால், அதனைச் செயற்படுத்த வேண் டும் என்பதில் ரணில் விக்கிரமசிங்க அக்கறையாக இருந்தார்.



2019ஆம் ஆண்டு மே மாதம் இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஆனால் அதே ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரான சூழலில், அந்த ஒப்பந்தம் பற்றி எதுவுமே பேசப்படவில்லை. அது பெருமளவுக்குக் கைவிடப்பட்டுவிட்ட ஒரு நிலைதான் காணப்பட்டது. துறைமுக தொழிற்சங்கங்கள், கொடுத்த அழுத்தம், சிங்களத் தேசியவாத அமைப்புக்கள் கொடுத்த நெருக்குதல் என்பன இதற்குக் காரணம்.

### இந்தியா, அமெரிக்கா கொடுத்த அழுத்தம்..

இதனைச் செயற்படுத்த வேண்டும் என இலங்கைக்கானஇந்தியத்தூதுவர்கோபால்பாக்லே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்குக் கடும் அழுத்தம் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ கடந்த வாரம் இந்தியாவில் உயர்மட்டச் சந்திப்புகளில் ஈடுபட்டிருந்தபோதும், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனைய விவகாரம் கலந்துரையாடப்பட்டிருந்ததாக டில்லி உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன. அந்தப் பேச்சுகளை முடித்துக் கொண்டே கொழும்புக்கு வந்திருந்தார் பொம்பியோ.

கிழக்கு முனையத்தை எப்படியாவது எடுத்துவிட வேண்டும் என்பதில் இந்தியா அவசரமாக இருந்தமைக்கு காரணம் உள்ளது. சீனாவின் மண்டலமும் பாதையும் என்ற செயற் திட்டத்தின் வரைபடத்தில் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையம் இடம் பெற்றுள்ளது. ஏற்கனவே, கொழும்பு துறைமுக நகரத் திட்டத்துக்காக பெருமளவு காணியை எடுத்துள்ள சீனா, கிழக்கு முனையத்தையும் எடுத்துக் கொண்டால், கேந்திர ரீதியாக தமக்கு பாரிய நெருக்கடி ஏற்படும் என்பதை இந்தியா தெரிந்திருந்தது.

கிழக்குக்கொள்கலன்முனையத்தின்அபிவிருத்தி வேலைகளை 2019ஆம் ஆண்டு மே மாதம் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம்செய்து முடிக்க வேண்டுமென இந்தியா அழுத்தும் கொடுத்தமைக்கு அதுதான் காரணம். “சீனா இலங்கையை சூறையாடுகின்றது. கடன் பொறிக்குள் சிக்க வைத்துள்ளது” போன்ற பொம்பியோவின் கருத்துக்களும் இந்த விடயத்தில் எதனையாவது செய்ய வேண் டும் என்ற அழுத் தத்தை கோட்டாபய அரசாங்கத்துக்குக் கொடுத்திருந்தது.

### இந்தியத் தூதுவர் சொன்னது என்ன?

இந்தப் பின்னணியில்தான் கடந்த வாரம் இடம்பெற்ற இணையவழி கருத்தரங்கு ஒன்றிலும், இந்த விடயம் குறித்துப் பேசப்பட்டுள்ளது. ஏசியன் இந்திய நிலையம், உலக விவகாரங்களுக்கான இந்தியக் கவுன்சில், பாத் ஃபைண்டர் உட்பட பல ஆய்வு நிறுவனங்கள் கூட்டாகச் சென்ற வியாழக் கிழமை இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தன. இதில், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனைய அபிவிருத்தித் திட்டத்தின் அவசியம் தொடர்பாக இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே விரிவாக எடுத்து விளக்கியிருந்தார்.

இதனைக் கூட்டாக ஏற்பாடு செய்திருந்த அமைப்புக்களில் ஒன்று ‘பாத் ஃபைண்டர்’ என்ற அமைப்பு என்பது கவனிக்கத்தக்கது. புதுடில்லிக்கான இலங்கைத் தூதுவராகப் பிரேரிக்கப்பட்டிருக்கும்மிலிந்தமொரகொடதான்இந்தஅமைப்பின் நிர்வாக இயக்குனர். அவரது கருத்துக்களுக்கு அமைவாகவே இந்த அமைப்பும் செயற்பட்டு வருகின்றது. அமைச்சரவை அந்தஸ்த்தைக் கொண்ட தூதுவாக அவரது பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது. புதுடில்லி அவரை ஏற்றுக் கொள்வதற்குத் தயாரென பச்சைக் கொடி காட்டியிருக்கின்றது. இலங்கையில், உயர் பதவிகளுக்கானவர்களை நியமிப்பதற்கான குழுவின் முடிவுக்காக அவர் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த ‘மெய்நிகர்’ கருதரங்கு கூட, கொழும்பின் இராஜதந்திரிகள், கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் ஒரு அழுத்தத்தைக் கொடுப்பதற்கான முயற்சிதான்.


### நிர்வாகம் முழுமையாகவும் 49 வீத பங்கும் இந்தியாவுக்கு

இந்தப் பின்னணியில்தான் இந்த கொள்கலன் துறையை அபிவிருந்தி செய்வதற்கான பொறுப்பை “அதானி போட் என்ட் ஸ்பெசல் எக்கொனமிக் சோன்”(அதானி துறைமுக மற்றும் சிறப்பு பொருளாதார வலயம்) என்ற இந்திய நிறுவன த்திற்கு கிழக்கு முனையத்தில் 49% பங்குகளை விற்பனை செய்வதற்கு இலங்கை இணங்கியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அதனை விட அதன் முழு நிர்வாகத்தையும் குறித்த நிறுவனத்திற்கு வழங்க இலங்கை அரசு இணங்கியுள்ளதாக சர்வதேச பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்குமுனையின் 100 வீதமும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் செயற்படுத்தப்படும் என தேர்தலுக்கு முன் வாக்குறுதி அளித்த கோட்டாபய அரசாங்கம், தற்போது கொரோனா ஊரடங்கை சாதகமாக பயன்படுத்தி கிழக்கு முனையத்தின் முழு நிர்வாகத்தையும், 49 வீத பங்கையும் இந்திய நிறுவனத்திற்கு விற்பனை செய்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

இந்தியாவைச் சமாதானப்படுத்துவதற்காக கொழும்பு எடுத்திருக்கும் இந்த நகர்வு நிச்சயமாக, எதிர்க்கட்சிகள், சிங்களத் தேசியவாதிகள் மத்தியில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தும்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# சிங்கள பௌத்த மயமாகும் வவுனியா வடக்கு
## அன்று கச்சல்சமணங்குளம்
## இன்று சபுமல்கஸ்கட..!

வவுனியா வடக்கின் தெற்குப் பக்கமாக இருக்கின்ற அடர் காடுகளுக்குள் நுழைந்து பார்த்தால், பெருமரங்கள் மட்டுமே நிற்கின்றன. காடுகளுக்குள் மிக விரைவாக குடில்கள் முளைக்கின்றன. அடர் காடுகள் என அடையாளமாகியிருந்த இடங்கள், செறிவான மரங்களுடையனவாக மாறிக்கொண்டிருக்கின்றன. எங்கிருந்தோ வரும் சிங்கள மக்களும், பௌத்த மத தலைவர்களும் தங்களுக்கான இடங்களைப் பிடிப்பதிலும், புதிய கட்டடங்களை அமைப்பதி லும் இரவு பகல் பாரா து உழைத்துக்கொண்டிருக்கின்றனர்.




கச்சல்சமணங்குளம் அடர் காட்டுப் பகுதியில் 'சபுமல்கஸ்கட தொல்லியல் வேலைத்தல' எனும் பெயர்ப்பலகையை நாட்டி, தொல்பொருள் அடையாளங்கள் நிறைவாக உள்ள பகுதிகளை சிதைத்து, பழையகால தூண்களை நிறுத்தி வனப் பகுதிக்குள்ளேயே களிமண்களால் கல் அரிந்து செங்கற்களாக சூழைவைத்து பழைய பௌத்தமத வணக்கஸ்தலம் போன்ற சாயலில் பாரிய கட்டுமான வேலைகள் வனப்பகுதிகளுக்குள் நடைபெற்று வருகின்றன.



அங்கு பௌத்த துறவிகள் தங்குவதற்கு மரத்தினாலான சொகுசு வீடுகள் கட்டப்படுகின்றன. நூற்றுக்கணக்கான வேலையாட்கள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், வனத்து றையினர் சீ.எஸ்ரி ஊழியர்களென பலர் மிகவும் விரைவாக கட்டுமானப் பணிகளில் ஈடபட்டு வருகின்றனர்.

நாடுகொரோனாவைரஸ்தாக்கத்தின்பக்கம் திரும்பி, வைரசிற்கு எதிராக போராடிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தமிழ் மக்களினதும், மக்கள் பிரதிநிதிகளின் கவனத்துக்கும் எட்டாத வகையில் மிகவும் நிதானமாக தமிழர் நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன.



இந்தப் பகுதி வட மத்திய மாகாணத்தையும், வட மாகாணத்தையும் பிரிக்கும் எல்லைக்கோடு



இந்த இடத்தின் ஊடாகத்தான் கீறப்பட்டிருக்கிறது. வட மாகாணத்தின் வவுனியா மாவட்டத்துக்குரிய கச்சல்சமளங்குளம், முதலிக்குளம், ஊற்றுக்குளம், கொக்கச்சாங்குளம் ஆகிய தொன்மைக் கிராமங்கள் இந்த எல்லைக்கோட்டின் அருகே இருக்கின்றன. கடந்தகாலத்தில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகள், எல்லைக்கிராமங்களில் ஏற்பட்ட வன்முறைகள் காரணமாக இங்கிருந்த தமிழர்கள் முற்றாக இடம்பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்று விடவே, தற்போது இக்கிராமங்கள் அடர்வனமாக மாறி விட்டன.



இக்குடியேற்றம் இன்று நேற்று திடீரெனத் தோன்றியவையல்ல. 1983, 1984 ஆம் ஆண்டுகளில் பதவி என்கிற சோழ இராச்சியத்தின் நிர்வாக மையத்தை, பதவியா என சிங்களத்திற்குப் பெயர்மாற்றி குடியேற்றங்கள் நடத்தப்பட்டன. அதன் நீட்சிதான் வவுனியா வடக்கு பகுதியின் எல்லைக்குள் நுழைந்திருக்கிறது.

**ஆர்வலன்**

தற்போதைக்கு வவுனியா நகரிலிருந்து பார்த்தால், 1990 ஆம் ஆண்டுகளில் இருந்து சிங்கள குடியேற்றங்கள் வவுனியா நகரை அண்மித்த பகுதியில் ஏற்படத்தொடங்கியிருக்கின்றன. மடுகந்தை பெரியளவிலான குடியேற்றத்தை முதலில் கண்டது. அது அப்படியே பரவலடைந்து, எட்டம்பகஸ்வெவ, ஈரப்பொத்தானை, மாமடு என விரிவடைந்திருக்கிறது. 2009இற்குப் பின்னர் விரைவான குடியேற்றங்களும் புதிய காடழிப்புக்களும் இப்பகுதியில் இடம்பெற்றிருக்கின்றன.

அது வளர்ச்சியடைந்து, வட மத்திய மாகாணத்தின் எல்லைக்குள்நுழைந்து அம்மாகாணத்தின் குறுக்காகப் பரவியிருக்கிறது. அந்தப் பரவல், குறித்த மாகணத்தின் ஒரு பகுதியை முழுவதுமாக நிரவி, 2014ஆம் ஆண்டளவில் வடமாகாணத்தின் இறுதி எல்லையான வவுனியா வடக்கிற்குள் நுழைந்துவிட்டது. 2019 இன் நடுப்பகுதி வரையில் வவுனியா வடக்கின் வெடிவைத்தகல்லு வரைக்கும் பரவியிருக் கிறது. அதாவது வவுனியா நகரம், அநுராதபுரத்தின் வடமுனை வவுனியா வடக்கின் தென்பகுதி வரைக்கும் குறுக்காக நன்கு திட்டமிட்ட வகையில் புதியதொரு சிங்கள குடியேற்றம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. எவ்விடத்திலும் மாற்றினத்தவரின் குடியேற்றங்கள் குறுக்காக வந்துவிடாத வகையில் மாகாண, மாவட்ட, பிரதேச நிர்வாக எல்லைகளையெல்லாம் கவனத்தில் எடுக்காது, தொடர்ச்சியான குடியேற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

### கலாபோகஸ்வெவ எனப் பெயர்மாறிய கச்சல்சமளங்குளம்

இவ்வாறு வவுனியா வடக்கிற்குள் நுழைந்துவிட்ட சிங்கள குடியேற்றத்தின் பெயர் கலாபோகஸ்வெவ. அதாவது கச்சல் சமளங்குளத்திற்கு இடப்பட்டிருக்கும் சிங்களப் பெயர் கலாபோகஸ்வெவ. வவுனியா வடக்கின் வெடி வைத்தகல்லு கிராம செயலாளர் பிரிவுக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. அப்பகுதிக்குள் கிட்டத்தட்ட 400 வரையிலான சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள் என அங்கு கடந்த வருடம் தெரிவிக்கப்பட்டது. அங்கு உண்மையில் எவ்வளவு சிங்கள குடும்பங்கள் உள்ளன என்பதை அறிவதற்கு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர். கட்டுரையாளர் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பித்த தகவல் அறியும் உரிமைச்சட்ட விண்ணப பப்படிவத்திற்கு இன்னமும் உரிய பதில் வழங்கப் படவில்லை. அண்மையில் அரசினால் வவுனியா வடக்கு பகுதியில் வாழும் வறிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவுக்கான சான்றிதழ்களைப் பெற வந்தவர்களில் தமிழர்களை விட சிங்களவர்களே அதிகம்.

இந்தக் குடியேற்றங்கள் இப்போதும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. காடுகளுக்குள் புதிய வீதிகள் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்



றன. ஆங்காங்கே மண்ணாலான குடில்கள் அமைக் கப்பட்டுள்ளன. பெரிய கட்டடங்களை அமைப்பதற்கான மணல், தளபாடங்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன. புத்தர் சிலைகளும், கொடிகளும் காடுகளுக்குள் கட்டப்பட்டுள்ளன. கீழ்க் காடுகள் அழிக்கப்பட்டு, சிறுகுடில்களும் அமைக் கப்படுகின்றன.

### சபுமல்கஸ்கட சைத்திய

கச்சல்சமளங்குளத்தின் அண்மைப் பகுதியான கொக்கச்சாங்களும் – ஊற்றுக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் பௌத்த சைத்தியத்தின் பெயர்தான் சபுமல்கஸ்கட சைத்திய. புராதன தொல்லியல் சிதைவுகள் காணப்படும் இவ்விடத்தை 2013 ஆம் ஆண்டிலிருந்து இராணுவம் பாதுகாத்து வந்தது. தற்போது பௌத்த சிதைவுகளைப் பாதுகாக்கும் சில அமைப்புக்களும், பிக்குமாரும் பொறுப்பெடுத்து புதிய விகாரைகளையும் கட்டடங்களையும் அமைத்து வருகின்றனர். பௌத்த மதப் பிக்குகளும் இங்கு தங்கியிருக்கின்றனர்.

நீரற்ற மகாவலி நதியைக் கொண்டு நடத்தப் படும் குடியேற்றவாத அரசியலின் இன்னொரு கட்டம்தான்இது. தமிழர்களின்நிலத்தொடர்ச்சியை முற்றாக சிதைக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

நேர்காணல்

# கொரோனாவில் இருந்து விடுபட வேண்டுமா?



வைத்திய கலாநிதி த.காண்டீபன்

# பாரம்பரிய வாழ்க்கை முறைக்குத் திரும்புங்கள்

**இலங்கையில் கோவிட்-19 தொற்று அதிகரித்துள்ள நிலையில், வடக்கு மாகாணத்திலுள்ள மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய விடயம் தொடர்பாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்க வடக்கு மாகாண இணைப்பாளர் வைத்திய கலாநிதி த.காண்டீபன் 'இலக்கு' மின்னிதழுக்கு வழங்கிய நேர்காணலின் கருத்து வடிவம்.**

கோவிட்-19 தொற்று தற்போது இலங்கை மக்களிடையே பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. அதை எதிர்த்து அனைவரும் போராட வேண்டிய கட்டாயம் உள்ளது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் நாளுக்கு நாள் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருவதுடன், இறப்புக்களும் தொடர்சியாக பதிவாகி வருகின்றன.

வடக்கு மாகாணத்தில் ஏனைய மாகாணங்களைப் போன்று சமூகத்தில் தொற்று இனங்காணப்படவில்லை என்றாலும், ஆபத்து உள்ள பகுதியாகவே நாம் பார்க்கிறோம். வெளி மாவட்ட மக்கள் வந்து செல்கிற இடமாக இருப்பதால், ஆபத்தை எதிர் கொள்வதற்கு எந்த நேரமும் நாம் தயாரக இருக்க வேண்டும்.

### கோவிட்-19 ஆபத்து வடக்கில் நீங்கவில்லை.

மேல் மாகாணத்தில் இந்த கோவிட் தொற்று குறையும் வரைக்கும் எமக்கு ஆபத்து உள்ளது. எனவே சில கட்டாய நடைமுறைகளை நாம் எமது பிரதேச மக்களுக்கு அறிவித்துள்ளோம். அந்த வகையில் திருமண நிகழ்வுக்கு 50 பேரும் மரணச் சடங்குகளுக்கு 25 பேர் வரையில் கலந்து கொள்ளலாம் என்றும், வேறு எந்த காரணத்துக்காகவும் பொது மக்கள் ஒன்றுகூடுவதை தடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளோம்.

ஆலய திருவிழாக்கள் அனுமதிக்கப்படாது. கடவுளை வணங்குவதற்கு எந்த தடையும் இல்லை. ஆனால் கூட்டம் கூடி வழிபாடுகள் செய்ய முடியாது. கலந்துரையாடல்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதும், முக்கியமான மக்கள் நலன் சார்ந்து முக்கியமானதும், அவசரமானதுமான கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியும். அதிலும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

மாவட்டம் விட்டு மாவட்டம் செல்பவர்கள் யாராக இருந்தாலும் குறிப்பாக சுகாதாரம், போக்குவரத்து துறைகளில் சம்பந்தம் இல்லாதவர்கள் கட்டாய தனிமைப்படுத்தில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளதுடன், வெளி மாவட்டங்களுக்கு செல்லும் போது செல்லும் இடங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளோம்.

ஆபத்து குறையவில்லை. பெரும் ஆபத்தான கட்டத்தில் உள்ளோம். எனவே சுகாதாரத் துறையால் ஆபத்து குறைந்துள்ளதாக அறிவுக்கும் வரை நாம் மிக கவனமாக இருக்க வேண்டும்.

### பண்டிகைகளை வீட்டில் இருந்து கொண்டாடுங்கள்

இனிவரும் நாட்களில் தொடர்சியாக பல திருவிழாக்கள்,பண்டிகைகள் வரவுள்ளது. பொது மக்கள் மிக மிக அவதானமாக இருக்க வேணடும் நாட்டில் ஆபத்து நீங்கும் வரை பொறுமையாக இருக்க வேண்டும்.

குறிப்பாக பண்டிகைக் காலங்களில் பொது மக்கள் வெளியில் சென்று பொருட்கள் வாங்குவது வழமை. இம்முறை அவற்றை தவிர்தல் வேண்டும். புத்தாடைகள் அணிவது முக்கியமில்லை. தூய்மையான ஆடைகளை அணிந்து தூய்மையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வீட்டில் இருந்து பண்டிகையை குடும்பத்துடன் கொண்டாடுங்கள். ஆலயங்களுக்குத் தனித் தனியாக சுகாதார நடவடிக்கைகளை கடைப் பிடித்து சென்று வாருங்கள்.

### தவறான பழக்கவழக்கங்களிலிருந்து தமிழ் மக்கள் மாறவேண்டும்.

தமிழ் மக்கள் பல தவறான உணவுப்பழக்க முறைகளுக்கு மாறி விட்டார்கள். அது ஆபத்தானது. மேற்கத்தேய உணவு முறைகளை கடைப்பிடிப்பதும், சத்துணவுகளை தவிர்க்கவும் பழகி விட்டார்கள். அதே போன்று பசும்பாலை தவிர்த்து, பால் மாக்களை பயன்படுத்துகிறார்கள். இதன் ஆபத்தை அறிந்து மக்கள் செயற்பட வேண்டும்.

பெறுமதி மிக்க எமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்துவிட்டு, தரமற்ற உடலுக்கு தீங்குவிளைவிக்கக்கூடிய உணவுகளை விலைகொடுத்து வாங்கி உண்ணப் பழகி விட்டார்கள். இது நோயைஅதிகரிக்குமே தவிர நோயிலிருந்து விடுபட முடியாது.

எமது மூத்தோரின் பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். விவசாயத்தில் அக்கறை காட்ட வேண்டும். வியர்வை சிந்துமளவுக்கு வேலைகளையோ, உடற்பயிற்சிகளையோ நாம் செய்ய வேண்டியது கட்டாயம். எமது மூத்தோர் இப்போதும் உடல் நலத்துடன் இருப்பதற்கு அவர்களின் பழக்கவழக்கங்களே காரணம். அதை நாம் மீண்டும் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் தற்போது எழுந்துள்ளது.

### தமிழர் பாரம்பரிய உணவு பழக்க முறையை கடைப்பிடியுங்கள்

கோவிட்-19 தொற்றை வராமல் தடுப்பதற்கோ, குணப்படுத்துவதற்கோ எந்த உணவுப்பழக்க முறையும் இதுவரை இல்லை. ஆனால் குறித்த தொற்றில் இருந்து விரைவில் விடுபடுவதற்கு பல வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

பாரம்பரிய உணவு பழக்க முறைகளுக்கு பொதுமக்கள் மாறவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக எமது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கான உணவுகளை நாம் உண்ண வேண்டும். எனவே பாரம்பரிய உணவு பழக்க முறையை கடைப்பிடித்தால் மட்டுமே அது சாத்தியமாகும். வீட்டுத்தோட்டம் அமைப்பது அவசியம்

குறிப்பாக வடக்கில் இருந்து மிகவும் தரமான மரக்கறிவகைகள் அதிக விலைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அங்கிருந்து அதிகூடிய விலைக்கு மரக்கறிகள் இறக்குமதி செய்யப்படுகிறது. அதை எமது மக்களும் அதிக விலைக்கு பெற்றுக் கொள்கிறார்கள். ஆதில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும். இங்கு வீட்டுத் தோடம் அமைப்பதற்கு பல வழிமுறைகள் உள்ளது நஞ்சற்ற மரக்கறிகளை நாமே உருவாக்கி உண்பது சிறந்த முறை அந்த பழக்கத்தை உருவாக்குவதே எமது இருப்புக்கு சாத்தியமாகும்.

### புதிய வாழ்க்கை முறையை நோக்கி செல்வோம்.

தோற்று நோய் அபாயம் எப்போது நீங்கும் என நாம் கூற முடியாது. ஆனால் எமது உடல் உளத்தில் அக்கறை செலுத்த வேண்டிய தேவை எமக்குள்ளது.

குறிப்பாக தற்போது கோவிட் 19 தொடர்பாக அதிக செய்திகளை படிக்காமல் எமது அன்றாட கடமைகளில் அக்கறை செலுத்த வேண்டும் தொலைக்காட்சிகளுக்குள் மூழ்காமல் மன நிலையை மாற்ற புத்தகங்களை படிக்க வேண்டும் பிள்ளைகளுடன் நேரத்தை செலவிட வேண்டும்.

வீட்டில் சுய தொழில் முயற்சியை ஆரம்பிக்கலாம். பாரம்பரிய விவசயாத்துக்கு மாறவேண்டும். இந்த தொற்றில் இருந்து விரைவில் குணமடைவதற்கு சில வழிகளை கூற முடியும்.

மதுப் பழக்கம், புகைத்தல் என்பவற்றை உடனடியாக நிறுத்த வேண்டும். தொற்று நோயிலிருந்து எம்மை பாதுகாப்பதற்கான முயற்சிகளை நாம் செய்ய வேண்டும். அதன் மூலமே தொற்று நோயிலிருந்து விரைவில் விடுபட முடி யும்.

• • •

### அனைத்துலக விதி ... தொடர்ச்சி...

கள், பழிவாங்கல் போன்ற செயற்பாடுகள் அற்ற நிலையில்அவர் தொடர்ந்து பணியாற்றுவதற்கான வழிகளையும் ஏற்படுத்த வேண்டும்.

முஸ்லீம் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த இவர், சிறீலங்கா அரசுக்கு எதிராக பல வழக்குகளை பதிவு செய்தவர். முஸ்லீம் மக்களின் உரிமைகளுக்காக செயலாற்றியவர். கடந்த ஏப்பிரல் 14 ஆம் நாள் கைது செய்யப்பட்ட அவர், மீது புனித ஞாயிறு தாக்குதலில் தொடர்புள்ளவர் என்ற குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆனால் அவரின் கைது என்பது ஒரு எழுந்தமானமான கைது ஆகும். சிறீலங்கா அரசு அனைத்துலக மனித உரிமைகள் விதிகளின் சரத்து 3இற்கு கட்டுப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது அனைத்துலக பொது மற்றும் அரசியல் உரிமைளுக்கும் சிறீலங்கா அரசு கட்டுப்பட்டுள்ளது. இந்த விதிகள் எழுந்தமானமான கைதுகளை தடுப்பதுடன், கைது செய்யப்பட்டவர்கள் நீதியாக நடத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றன.

இந்த கைது என்பது சிறுபான்மை முஸ்லீம் மக்களுக்கு எதிரான அரசின் திட்டமிட்ட செயற்பாடு என, ஐக்கிய நாடுகள் சபையின் 6 சிறப்பு அதிகாரிகள் கடந்த ஜூன் மாதம் தெரிவித்துள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா நெருக்கடியும் கைநழுவிய போக்கும்

கோவிட்-19 கொள்ளை நோய் தீவிரமடைந்துள்ளது. அதன் தொற்றுப் பரவலைத் தகுந்த முறையில் தடுத்து நிறுத்த முடியாமல் இலங்கை தடுமாறிக் கொண்டிருக்கின்றது. இராணுவத்தை முதன்மை நிலையில் பயன்படுத்தி கடந்த மார்ச் மாதம் ஏற்பட்டிருந்த நோய்த்தொற்றின் முதலாவது அலையை அரசு வெற்றிகரமாகக் கையாண்டிருந்தது. அது ஏனைய நாடுகளுக்கு முன் மாதிரியானது என்று உலக சுகாதார நிறுவனம் பாராட்டி இருந்தது.

இதனால்சினிமாகதாநாயகனைப்போன்று, ஜனாதிபதி கோத்தபாய அரசு இறுமாப்புடன் கொலரைத் தூக்கிவிட்டுக் கொண்டது. ஆனால் ஒரு சில மாதங்களிலேயே நிலைமைகள் தலைகீழாக மாறிவிட்டன. குறிப்பாக ஒக்டோபர் மாதத்தில் கொரோனா வைரஸ் திடீரென அதிரடியாகத் தாக்கத் தொடங்கி உள்ளது. இதனால் மக்கள் நாளாந்தம் கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஆளாகின்ற நிலைமையும், உயிரிழக்கின்ற நிலைமையும் உருவாகி விட்டன. இந்த நிலைமையை எதிர்கொள்வதில் தளர்வான போக்கையே அரச தரப்பில் காண முடிகின்றது.

ஒக்டோபர் மாத முடிவிலும், நவம்பர் மாத முற்பகுதியிலுமான இரண்டு வார காலப்பகுதியில் மாத்திரம் 13 பேரை கொரோனா வைரஸ் பலி கொண்டிருக்கின்றது. அரச தரப்பினரால் குறிப்பிடப்பட்ட கொத்தணி நிலைமையைக், கடந்த அதன் ஒக்டோபர் மாத பாய்ச்சல் சமூகத் தொற்றாக மாறியுள்ளது. ஆனாலும் அது கொத்தணி தொற்று முறையிலேயே இருக்கின்றது என்று அரசாங்கம் பிடிவாதமாகக் கூறி வருகின்றது.

கொரோனாவைரஸ் தொற்றிப் பரவுவதைத் தடுப்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கின்றது வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பிரதேசங்கள் ஊரடங்கின் மூலம் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டிருக்கின்றன. மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. சிலமாவட்டங்களில்இருந்து வெளியேறுபவர்களையும், உள்ளே பிரவேசிப்பவர்களையும் 14 நாட்கள் தனிமைப்படுத்திக் கண்காணிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.



முகக் கவசம் அணிதலும், இடைவெளி பேணுதலும் கட்டாயமாக்கப்பட்டிருக்கின்றன. இதனை மீறிச் செயற்படுபவர்களைக் கண்காணிப்பதற்காக சிவிலுடையில் படையினர் களத்தில் இறக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களால் அடையாளம் காணப்படுபவர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இது போன்ற இறுக்கமான வேறு பல நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்திருக்கின்றது.

ஆனாலும் கொரோனா கட்டுக்கடங்கவில்லை. இதனால் கொரோனாவை நீங்களே வெற்றிகரமாக எதிர்த்து வாழுங்கள் என்று நாட்டு மக்களை நோக்கி ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ச கூறும் அளவுக்கு நிலைமைகள் மோசமடைந்திருக்கின்றன. சமூகத்தொற்றாகக் கருதப்பட்ட கொரோனா வைரஸ் வீடுகளுக்குள் நுழைந்து விட்டது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் இணைப்பாளர் மருத்துவர் ஹரித்த அலுத்கே ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸின் தொற்றுக்கு இலக்காகி மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒக்டோபர் மாதம் வரையில் 13 ஆகவே இருந்தது, ஆனால் நிலைமைகள் தீவிரமடைந்ததையடுத்து ஒக்டோபர் 20 ஆம் திகதிக்குப் பின்னர் 16 பேர் உயிரிழந்திருக்கின்றார்கள்.

இந்த நிலையில் வீடுகளுக்குள் புகுந்த கொரோனாவினால் ஒரே தினத்தில் 5 பேர் உயிரிழந்த சம்பவமும் இடம்பெற்றிருக்கின்றது. இந்த ஐந்து பேரும் வெளியில் நடமாடியவர்கள்அல்ல. வீடுகளுக்குள்ளேயே நோய்வாய்ப்பட்டிருந்தவர்கள்எனதெரிவிக்கப்பட்டுள்ளது.அவர்கள்எவ்வாறு வைரஸ் தொற்றுக்கு உள்ளாகினார்கள் என்பது உடனடியாகக் கண்டறியப்படவில்லை. இதற்கான புலன் விசாரணைகள் ஆரம்பிக்கப்படுமா என்பது

**பி.மாணிக்கவாசகம்**

பற்றிய தகவல்கள் வெளியாகவில்லை. இது கொரோனா வைரஸ் பரவலில் இதுவரையிலும் ஏற்படாத மிக மோசமான நிலைமை. உயிரிழப்புக்கள் அதிகரிக்கப் போவதற்கான அறிகுறியாகும்.

கொரோனா உயிரிழப்புக்களின் எண்ணிக்கை திடீரென 29 ஆக உயர்ந்துள்ளது. அதேவேளை கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்து 500 ஐயும் கடந்து நாளாந்தம் அதிகரித்துச் செல்வது நோய்த் தொற்று நிலைமையைக் கட்டுக்கடங்காமல் செய்யக் கூடும் என்ற அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்தத் தீவிர நிலைமைக்கு அரசினதும் அரச அதிகாரிகளினதும் விழிப்புணர்வற்ற செயற்பாடுகளே காரணம் என கூறப்படுகின்றது. நாட்டு மக்களின் பொறுப்பற்ற தன்மையும் இதற்குத் துணை புரிந்துள்ளது என்பதை மறுக்க முடியாது. கொத்தணி முறையில் இருந்து முன்னேறி குடும்பங்களை கொத்து கொத்தாகப் பற்றி பரவத் தொடங்கியுள்ள நிலையில்தான், நாட்டு மக்களே வைரஸ் தொற்று அதிகரிப்பதற்கான காரணம் என குற்றம் சுமத்தியுள்ள ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ச, கொரோனாவுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்ற அறிவுரையை வழங்கியுள்ளார்.



உலகில் எங்குமே இல்லாதவாறு இலங்கையில்தான் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இராணுவத்தின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனானப்பட்ட விடுதலைப்புலிகளை மௌனிக்கச் செய்ததைப் போன்று இராணுவம் கொரோனாவின் பிடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் என்ற அரசியல் வேதாந்த நிலையில் இருந்து அரசு இன்னும் மாறவில்லை.

கொரோனா விடயத்தில் சுகாதாரத்துறையினரிலும் பார்க்க அரசாங்கம் இராணுவத்தின் மீது தங்கியிருந்ததன் - தங்கியிருப்பதன் விளைவே கொரோனா வைரஸின் தீவிர தொற்று நிலைமையாகக் கருதப்படுகின்றது. மருத்துவர்கள் மற்றும் சுகாதாரத்துறையினரின் வழிகாட்டல்களில் அரசு உரிய கவனம் செலுத்துவதில்லை என்று ஆரம்பத்திலேயே குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

தொற்றுத் தடுப்புக்கான பிசிஆர் சோதனைகளை அதிகரிக்க வேண்டும். வென்டிலேட்டர் என்ற மூச்சுதவி இயந்திரங்கள் மற்றும் முன்னிலையில் செயற்படுகின்ற மருத்துவர்கள், தாதியர், மருத்துவ ஆய்வுகூடத்தினர், சுகாதாரப் பரிசோதகர்கள் போன்றவர்களுக்கான பாதுகாப்பு கவசங்கள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களும் சாதனங்களும் அவசரமாகக் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என்ற சுகாதாரத்துறையினருடைய கோரிக்கைகளுக்கு அரசு உரிய முறையில் செவிசாய்க்கவில்லை.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார மருத்துவ துறைசார்ந்த செயற்பாடுகளிலும் பார்க்க போர் முறை சார்ந்த நடவடிக்கைகளிலேயே அரசு அதீத நம்பிக்கை கொண்டிருக்கின்றது. ஆனால், இராணுவ பாணியிலான ஆட்சி நிர்வாகத்தையும் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான இராணுவ தலைமையிலான செயலணிச் செயற்பாட்டையும் கொரோனா வைரஸ் எகிறியிருக்கின்றது.

வகைதொகையின்றி வைரஸ் தொற்றிப் பரவுவதைத் தடுப்பதிலும் கொரோனாவின் பாதிப்புகளில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதிலும் கவனம் செலுத்த வேண்டிய சுகாதாரத்துறை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மந்திரிக்கப்பட்ட நீரை ஆற்றில் கரைத்ததும், கடலில் பாய்ந்து உயிரை மாய்த்தாவது கொரோனாவைக் கட்டுப்படுத்துவேன் என்று சூளுரைத்திருப்பதும் எதிர்க்கட்சியினருடைய நையாண்டி அரசியலுக்குத் தீனி போட்டுள்ளது.



அவருடைய செய்கை பௌத்த தர்மத்திற்கு முரணானது. அதனை ஏளனப்படுத்துவது என்ற தொனியில் கருத்துரைத்து பௌத்த பிக்குகளும் அவருக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி உள்ளனர். கொரோனாவின் கெடுபிடிக்குள் சிக்கியுள்ள நிலையில் தனது முக்கிய அமைச்சராகிய சுகாதாரத் துறை அமைச்சர் வெளிப்படுத்தியுள்ள கருத்து குறித்து அரசு அலட்டிக்கொள்ளவில்லை. அது அரசாங்கத்தின் கருத்து என்று கருதத் தக்க வகையில் அமைதியாக இருக்கின்றது.



நல்லாட்சி அரசாங்கத்தினால் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் பயங்கரவாதத் தாக்குதலில்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# 7 தமிழர்கள் விடுதலை என்பது இம்முறையும் தேர்தல்கால வாக்குறுதிகளில் ஒன்றாகுமா?

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி, தண்டனை அனுபவித்து வரும் 7 தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பது தொடர்பாக, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, ஈழ ஆதரவாளர்கள், நலன் விரும்பிகள் என பலராலும், பல கோணத்திலும் தமிழக அரசிற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இன்னொரு பார்வையில் பார்த்தால், தற்போதைய இந்திய அரசியலில் தேர்தல்கால பிரச்சார நடவடிக்கையாக இது நடைபெறுகின்றதா எனவும் எண்ணத் தோன்றுகின்றது. எதிர்வரும் ஏப்ரல் 2021இல் சட்டசபைத் தேர்தல் வரவிருக்கின்றது. அதற்கான ஏற்பாடுகள் தற்போதே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

1991 மே 21ஆம் திகதி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தின் போது, ஸ்ரீபெரும்புத்தூரில் தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலுக்கு இலக்காகி அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் 14பேர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து, இத்தாக்குதலை நடத்தியவர்கள் விடுதலைப்புலிகள் என்ற கோணத்தில் விசாரணைகள் ஆரம்பமாகின.

1991ஆம் ஆண்டில் இந்தத் தாக்குதல் காரணமாக, இந்தியாவில் வசித்த பல தமிழர்கள் (ஈழத் தமிழர்களும், இந்தியத் தமிழர்களும்) கைது செய்யப்பட்டனர். இறுதியில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் என பேரறிவாளன், முருகன், நளினி, றொபேட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன், சாந்தன் ஆகிய 7 பேரும் சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களில் முருகன், சாந்தன், றொபேட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய நான்கு பேரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். அத்துடன் றொபேட் பயஸ், ஜெயக்குமார் இருவரும் உறவினர்கள்.

விசாரணையின் போது, பேரறிவாளன், முருகன், நளினி, சாந்தன் ஆகிய நான்கு பேருக்கும் உச்ச நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது. இதில் சோனியா காந்தியின் பரிந்துரையின் பேரில் நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யக்கோரி ஏனைய மூன்று பேரும் ஜனாதிபதிக்கு மனு அனுப்பியிருந்தனர். ஆனால் அவர்களின் கருணை மனுக்கள் ஒகஸ்ட் 2011 இல் குடியரசுத் தலைவரால் மறுக்கப்பட்டன.

இவ்வாறு கருணை மனுக்கள் மறுக்கப்பட்ட நிலையில், இவர்களது தூக்குத் தண்டனைக்கு 2011 செப்டம்பர் 9இல் நாள் குறிக்கப்பட்டது. இந்தத் தண்டனையை விலக்கக்கோரி சில அரசியல் மற்றும் திராவிட இயக்கங்கள் போராட்டம் நடத்தின. இதன் பயனாக 2011 ஒகஸ்ட் 30இல் சென்னை உயர் நீதிமன்றம் இம்மூவரின் தூக்குத் தண்டனையை நிறைவேற்ற எட்டு வாரங்களுக்கு தடை விதித்தது. இம்மனு குறித்து ஜனாதிபதி முடிவு எடுக்க காலதாமதமாகியதால், உச்ச நீதிமன்றம் கடந்த 2014ஆம் ஆண்டில் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்தது. தொடர்ந்து விசாரணைகள் இடம் பெற்று வந்தன.

அத்துடன் 2018 செப்டெம்பர் 09ஆம் திகதி இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ரஞ்சன் கோகாய், நவீன் சின்ஹா, கே.எம்.ஜோசப் அடங்கிய அமர்வு, "அரசியல் சட்டம் 161 பிரிவைப் பயன்படுத்தி ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட ஏழு பேரை விடுதலை செய்வது தொடர்பாக தமிழக ஆளுநருக்கு, தமிழக அரசு பரிந்துரை செய்யலாம். அவர்களை விடுதலை செய்ய ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது" என்று தீர்ப்பு வழங்கினர்.

**கல்யாணி**

2014 பெப்ரவரி சட்டமன்றக் கூட்டத் தொடரில், பேரறிவாளன், முருகன், நளினி, றொபேட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன், சாந்தன் ஆகிய ஏழு பேரையும் விடுதலை செய்யலாம் என்று தமிழ்நாடு அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவு, மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும் என்றும், மத்திய அரசு 3 நாட்களுக்குள் பதில் அளிக்காவிட்டால், அவர்களை தமிழக அரசே விடுதலை செய்யும் என்றும் அப்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இந்த அறிவிப்பிற்கு பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் முதல்வரை சந்தித்து நன்றி கூறியிருந்தார்.



ஆனால் சட்டத்துறை அமைச்சர், ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக பல்வேறு அமைப்புகள் புலானய்வு நடத்தி வருகின்றன. அந்த அமைப்புகளை கண்காணிக்கும் அமைப்பு (Multi disciplinary monitoring agency) விசாரணை அறிக்கையை தந்த பின்னர், அதனை வைத்துதான் விடுதலை பற்றி முடிவு செய்யமுடியும் என ஆளுநர் கூறினார் என்றார்.

ஆனால் இன்று வரை அந்த வழக்கில் முடிவுகள் அளிப்பதில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை. தேர்தல்கள் நெருங்கும்போது, இந்தியாவிலுள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகள் தங்கள் தேர்தல் பிரச்சார வாக்குறுதிகளாக ஈழத் தமிழர் பிரச்சினைகளையும், ஈழ அகதிகள் பிரச்சினைகளையும், 7 தமிழர்கள் விடுதலையையும் அவ்வப்போது கையில் எடுப்பது வழக்கமாகி விட்டது.

இதேவேளை நவம்பர் 03ஆம் திகதி பேரறிவாளன் தாக்கல் செய்த மனு மீதான வழக்கு விசாரணைக்கு வந்தது. இந்த விசாரணையின் போது, மாநில அரசின் பரிந்துரையை இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக முடிவு எடுக்காமல் தங்கள் அலுவலகத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது, சட்டத்தின் அடிப்படையில் மாநிலத்தில் ஆட்சி நடைபெறவில்லையோ என்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே அந்த தோற்றத்தை நீக்கிட, தமிழக அரசின் பரிந்துரை மீது விரைவாக முடிவு எடுக்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்துக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது. மேலும் இந்த வழக்கு நவம்பர் 23 விசாரிக்கப்படும் என உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.

இது இவ்வாறிருக்க தற்போது பேரறிவாளன் சுகயீனம் காரணமாக கடந்த ஒக்டோபர் 9ஆம் திகதி பரோலில் சென்றுள்ளார். தாயார் அற்புதமாள் மீண்டும் 15 நாட்கள் பரோல் கேட்டுள்ளதால், எதிர்வரும் நவம்பர் 23ஆம் திகதி வரை அவருக்குப் பரோல் நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது அவர் மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சைக்காக, விழுப்புரம் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து பல எதிர்க்கட்சிகளின் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. தீர்மானத்தை அமுல்ப்படுத்த அதிமுக தவறிவிட்டது என திமுகவும், திமுக ஆட்சியிலிருந்த காலத்தில் அவர்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுத்திருக்கலாம் என அதிமுகவினரும் ஒருவர் மீது ஒருவர் மாறி மாறி குற்றச்சாட்டுக்களை முன் வைக்கத் தொடங்கினர்.

இதற்கிடையில் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்கள் கடந்த புதன்கிழமை (04) திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியத் தலைநகர் புது டில்லி புறப்பட்டுச் சென்றார். அங்கு இந்தியப் பிரதமர், குடியரசுத் துணைத் தலைவர், உள்துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தியிருந்தார். அவரின் பேச்சுக்களில் இந்த 7தமிழர்களின் விடுதலை தொடர்பான விடயமும் அடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இன்று வரை(08) இது தொடர்பான மேலதிக தகவல்கள் எதுவும் வரவில்லை.

இவர்களின் விடுதலை தொடர்பாக பல அரசியல்வாதிகளும், ஈழ ஆதரவாளர்களும், நலன் விரும்பிகளும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். இந்த வகையில்,

தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, 7 தமிழர் விடுதலைக்கு தீர்மானம் போட்டது அதிமுக அரசு தான். அவர்களுக்கு தண்டனை கொடுக்கலாம் என்று தீர்மானம் போட்டவர்கள் திமுக என்பதை மக்கள் மறந்துவிட மாட்டார்கள். தற்போது பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் விடுதலை குறித்து பேச திமுகவிற்கு எந்த தகுதியும் இல்லை, என தெரிவித்துள்ளார்.

திமுக தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புடைய 7 பேர் விடுதலையை வலியுறுத்தி ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்துக்கு கடிதம் எழுதியுள்ளார். தமிழக அமைச்சரவையின் 9.9.2018ஆம் திகதியிட்ட பரிந்துரையைப் பரிவுடன் ஏற்று அவர்களை விடுதலைசெய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்று எழுதியுள்ளார்.

பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் அறிக்கையில், "பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களின் விடுதலை குறித்து முடிவெடுப்பதில் ஆளுநர் தேவையற்ற காலதாமதம் செய்வதை அனுமதிக்க முடியாது. ஆளுநரிடம் தமிழக அரசு அழுத்தம் கொடுத்து ஒப்புதல் பெற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் இந்தக் கண்டிப்பு நிறைந்த வார்த்தைகள் 7 தமிழர்கள் விடுதலை தொடர்பான விவகாரத்தில் புதிய நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியிருக்கின்றன. 7 தமிழர்கள் விடுதலை குறித்து முடிவெடுக்காமல் தாமதிப்பதன் மூலம் ஆளுநர் எதையும் சாதிக்க முடியாது என தெரிவித்துள்ளார்.

திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி அவர்கள், 7 தமிழர்களின் விடுதலையில் நீதிமன்ற உத்தரவை ஏற்று விரைவில் ஆவனசெய்ய வேண்டும் என்றார்.

7 பேரை நிர்வாக ஆணை மூலம் விடுதலை செய்ய வேண்டும் என, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# தெரு ஓவியம், தினசரித் தன்மை (Every dayness), அடக்குமுறை எதிர்ப்பியங்கல்

பகுதி 03

தெரு ஓவியங்களின் பல் வகைத் தன்மைதான் எல்லோரையும் கவர்வதற்கான காரணமாக அமைகின்றது. அடக்குமுறைக்கெதிரான எதிர்ப்பையும், விடுதலையையும்மையப்படுத்தி வெளிவருகின்ற தெரு ஓவியங்கள், மக்களுடைய நாளாந்த வாழ்வியலை பிரதிபலிப்பதாக அமைகின்றது. *Henri Lefebre (1987)* ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட தினசரித்தன்மையை *(Everydayness)* மண்மயமாக்கி விளக்கமளிக்க முற்பட்டால், அடக்குமுறைக் குட்பட்ட மக்களின் தினசரித்தன்மை, முக்கோணச்சிக்கலுக்கூடு வெளிப்பட வேண்டிய அவசியமிருக்கின்றது. அடக்குமுறை, அடக்குமுறை எதிர்ப்பு, அடக்குமுறை உள்வாங்கல். அடக்குமுறையையும், அடக்குமுறையை உள்வாங்கியவர்களையும் ஒரு வகையில் சேர்த்தாலும் எதிர்வினை இவ் இரண்டுக்கும் எதிராகவே நின்று கொண்டிருக் கும். ஆக அடிப்படையில் இரு துருவ சிக்கலுக்குள்ளானதாக அடக்கு முறைக்குட்பட்ட சமூகத்தின் தினசரித் தன்மை நிச்சயிக்கப்படுகின்றது.

ஒன்று அடக்குமுறையாளர்களினால் நிச்சயிக்கப்படுகின்ற தினசரித்தன்மை,
இரண்டாவது அடக்குமுறையை எதிர்ப்பவர்களினால் நிச்சயிக்கப்படுகின்ற தினசரித்தன்மை,

இரண்டினதும் தினசரித்தன்மையை நிச்சயிக்கின்ற காரணிகளும், எதிர்பார்க்கப்படுகின்ற விளைவுகளும் ஒன்றுக்கொன்று முரண் நிலையிலிருந்து வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. இம் முரண் நிலையிலிருந்து தான் ஓவியம் வெளி வருகின்றது. இவ்வாறான ஒன்றுக்கொன்று முரணான அல்லது எதிர் நிலையிலிருந்து தான் ஓவியத்தின் *Michael Sheringham (2006)* குறிப்பிடுகின்ற 'வினையாற்றும் திறன்' வெளிப்படுகின்றது.

'அடக்குமுறை' உள்வாங்கப்படுவதில் வினையாற்றும் திறன் செயற்படுவதாக கூறப்படுவது அபத்தமாகத் தோன்றலாம். ஓவியத்தின் வினையாற்றும் திறனின் உச்சப்புள்ளி அடக்குமுறைக்கெதிரான ஓவியத்தில்தான் அடையப்படுகின்றது என்பது அபத்தமல்ல. பார்வையாளரினால் உள்வாங்கப்படும் வினையாற்றும் திறன் தெரு ஓவியத்தை சமூக இயக்கமாதலுக்கு இட்டுச் செல்லுகின்றது. வடக்கு – கிழக்கு ஓவிய வெளி அடக்குமுறையாளரின் (வெற்றியை) நியாயப்படுத்தலையும், அவர்கள் 2009இற்குப் பின் கொண்டாடும் வெற்றியை மையப்படுத்தியே ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அடக்குமுறையாளர் எவ்வாறு தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைப் பார்க்க முனைகின்றார்களோ- அப்பெரும் பான்மைச் சொல்லாடலின்- பிரதிபலிப்பாகவே ஓவிய வெளி ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் 'தினசரித்தன்மை' இராணுவமயமாக்கப்பட்ட சூழலில், பொது தெருஓவிய வெளி (சனநாயக) சுருங்கிப்போயுள்ளது அல்லது இல்லாமலே போயுள்ளது எனக் கூறலாம். இராணுவ மயமாக்கலுக்குள்ளிருந்து தான் பாரிய எதிர்ப்பு வெளிக்கிளம்ப முடியும், இராணுவமயமாக்கலை உள்வாங்காது எதிர்ப்பதாயிருந்தால். இவ்வாறாக உள்ள நிலையில் பயத்தையும், அதனூடு சாவையும் கட்டமைத்து உருவாக்கப்படும் வெளியில் தினசரித்தன்மையை பிரதிபலிக்கக் கூடிய தெரு ஓவியங்கள் எழ முடியும் என்பதற்கு பல்வேறு நாடுகளை உதாரணமாக குறிப்பிடலாம். அவ் எழுச்சிக்காக மக்களின் கூட்டு உளவியலை வலுப்படுத்துகின்ற தன்மை தெரு ஓவியங்களுக்கு உண்டு என்பதற்கும் உதாரணங்கள் உண்டு. தினசரி அடக்குமுறைத்தன்மையை மறைத்து மக்களை ஒரு மாயைக்குள் வைத்திருக்கின்ற உத்தி நீண்ட காலத்திற்கு நிலைக்கப்போவதில்லை. 2009இற்குப் பின்னரான அல்லது ஆயுதங்கள் மௌனித்த நிலையில் வெவ்வேறுகாலப் பகுதியில் சிறீலங்காவின் ஒற்றையாட்சிக்குள் உள்வாங்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களில், வாழ்வியலை, பணப் பெறுமதியை மையமாக வைத்து, சமூக, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களைத் தவிர்த்து, தனிநபர் வாழ்வியலையும் சுகபோகத்தையும், கூட்டு வாழ்வியலையும் விட்டு முன் வைக்கப்பட்ட வாழ்வியல் முறைமையில் வடக்கு – கிழக்கு பெரும்பாலுமே ஓர் சந்தைப் படுத்தலுக்கான வெளியாக மாற்றப்பட்டதுடன், மக்களும் நுகர்வோராக மாற்றப்பட்டார்கள். கூட்டு அடையாளம் சார்ந்து உரிமைகளுக்காய் குரல் கொடுத்த தியாகத் தன்மை ஐயப்படுத்தப்பட்டு, தேவையற்றதொன்றாக கட்டமைக்கப்பட்ட நிலையில், அடக்கு முறைத் தினசரித்தன்மையைப் பற்றிச் சிந்திக்க விடாது பணப் பெறுமதியை மட்டுமே மையமாகக் கொண்ட வாழ்வியல் முறையை தினசரித் தன்மையாக அறிமுகப்படுத்தமுற்பட்டது பெரும்பான்மை அரசு. இவ்வுத்தி 2009 இற்குப் பின்னர் மிகத் துல்லியமாக மக்களின் வாழ்வியலில் பிரதிபலித்தது. மக்களின் கூட்டு அடையாள வாழ்வியல் விழுமியங்களிலிருந்து அவர்களைத் திசை திருப்பிய உத்தி, அவர்களின் உரிமைக்காக போராடும் உரிமை யிலிருந்து அவர்களைத்திசை திருப்புவதாகும். அரசு முன்னெடுக்கும் கிளர்ச்சி எதிர்ப்பு அரசியல் உத்தியில் பணப் பெறு மதியை மையமாக வைத்து, தாராளவாத முதலாளித்துவத்தை (போட்டியை) முன் வைத்து ஊக்கமளிக்கின்ற வாழ்வியல் முறை மையில் பணம் உள்ளவர் கதாநாயகர்களாக உலவ விடப்படுகின்றார். பணம் வைத்திருக்கும் தன்மையை அதிகாரம் உள்ள தன்மையாகப் பிரதிபலித்து தலைமைத்துவத்திற்கு முன்னேறுகின்ற நிலைமை ஒரு செல்நெறியாக உருவாகி வருகின்றது. மேற்குறிப்பிட்ட தலைமைத்துவப்பாங்கு (பணம்-அதிகாரம் (செல்வாக்கு)–தலைமைத்துவம்) வடக்கு – கிழக்கில் மட்டுமல்ல பூகோள ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைமையாக உருவெடுத்துள்ளது.

மிக அண்மையில் 'நகரங்களை அழகுபடுத்துவோம்' என்னும் செயற்றிட்டத்தின் கீழ் பொது வெளியில் தெரு ஓவியங்கள் வரையப்பட்டன. அவ்வோவியங்கள் பெரும்பாலுமே பெரும்பான்மைவாதத்தினதும், அது கொண்டிருக்கும் வரலாற்று அரசியல் சொல்லாடலதும் பிரதிபலிப்பாகவே இருந்தன. சிறிலங்காவின் பன்முகத்தன்மையைத் தவிர்த்து ஒற்றைத் தன்மையை வலியுறுத்துவனவாக அமைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. வடக்கு – கிழக்கில் வரையப்பட்ட தெரு ஓவியங்கள் தமிழர் பிரதேசத்தின் அடக்குமுறைத் தினசரித்தன்மையை பிரதிபலித்ததாக தெரியவில்லை. பல்வேறு காரணங்கள் அவ்வாறானதொரு செயற்றிட்டத்திற்கு ஊக்கிகளாக அமையாதிருக்கலாம். 2009இன் பின்னர் வடக்கு–கிழக்கு 'சுய தணிக்கையை' தினசரித்தன்மையில் உள்வாங்கிக் கொண்டது. தணிக்கை புறத்திலிருந்து வந்த போதிலும், யதார்த்தத்தை தமிழர் தரப்பிலிருந்து ஆய்விற்குட்படுத்தியவர்கள், உரிமைசார் தெளிவுரைகளை முன்னிறுத்தியவர்கள் எதிர்கொண்ட விளைவுகளால் தினசரித்தன்மையில் சுய தணிக்கை ஒரு கூறாக உள்வாங்கப்பட்டது. அதனுடைய எதிரொலியாகவே வடக்கு–கிழக்கில் எழுந்த தெரு ஓவியங்களையும் நோக்க வேண்டியுள்ளது தினசரி அடக்குமுறை அனுபவங்களை நாசூக்காக பிரதிபலிக்கக் கூடிய செல்நெறியின் அவசியம் உணரப்படுகின்றது. தமிழ்த்தேசிய நலன்கள்சார்ந்தும், அடையாளக் கட்டமைப்புச் சார்ந்தும் தெரு ஓவியங்கள் வரையப்பட வேண்டிய காலமிது. முல்லைத்தீவில் நடந்த மகாவலி அபிவிருத்திச் சபையின் நில அபகரிப்பிற்கெதிரான போராட்டத்தில், ஒரு பெண்மணி கூறிய வரிகள் மிக யதார்த்தமானவை. அடக்குமுறைத் தின சரித்தன்மையை துல்லியமாக வெளிக் கொணர்பவை. "2011ஆம் ஆண்டுக்குப்பின் மீள் குடியேற்றப்பட்ட நாங்கள் எங்களுடைய சொந்த வயல்களில் கூலிகளாக வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானோம்". இந்த யதார்த்தம் கலை வடிவில், குறிப்பாக ஓவியத்திற்கு மொழி மாற்றம் செய்யப்படுமானால் அடக்குமுறைத் தினசரித் தன்மை வெளிப்படுத்தப்படும். அதுவே அடக்குமுறைக்கெதிரான ஆயுதமாகவும் மாற்றப்படலாம்.

## தெரு ஓவியமும் அடக்குமுறை எதிர்ப்பியங்கலும்

பேச்சுரிமையற்ற, கருத்துச் சுதந்திரமற்ற சனநாயக வெளியில் தெரு ஓவிய அரசியற் செயற்பாட்டாளனுக்கு அல்லது செயற்பாட்டாளர்களுக்கு சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையில் அடக்குமுறை எதிர்ப்பியங்கலை தெரு ஓவியத்தினூடு பிரதிபலிப்பது அல்லது வெளிப்படுத்துவது சாத்தியமா என்ற கேள்வி எழாமலில்லை. அடக்குமுறைத் தினசரித் தன்மையை பதிவு செய்தலும் எதிர்ப்பியங்கலின் ஒரு வடிவமே. அடக்கு முறை எதிர்ப்பியங்கலை பண்பியல் அல்லது அருவ ஓவியத்தினூடு பிரதிபலித்தால் ஓவியச் செயற்பாட்டாளர்கள் தொடர்ந்து இயங்கக்கூடிய தன்மை இருக்கும். அடக்குமுறை வரையறைக்குள் 'அடங்க மறுத்தலும்' எதிர்ப்பை வெளிப்படுத்தலே. 2011இல் தஹ்றிர் *(Tahrir)* சதுக்கத்தில் நிகழ்ந்து எகிப்திய புரட்சியில் அப்போதைய அதிபரான முபாரக்குக்கு எதிரான ஆர்ப்பாட்டத்திலும், அவருடைய 30 வருட ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்ததிலும்தெரு ஓவியங்களினதும் பங்கு கணிசமானது *(S.H.Awad 2017)*. அடக்கு முறை எதிர்ப்பியக்கத்தில் தெரு ஓவிய காட்சிய மைவில், தந்திரோபாய காட்சி முறைமை, எதிர் பார்க்கின்ற அரசியல் செயற்றிட்டத்தை வீரியமாக்க வலுச்சேர்க்கின்றது *(Ibid)*. ஓவியக் காட்சி வெளிக்கும், படிமத்திற்குமான உறவு ஒன்றையொன்று சார்ந்து நிற்பது *(Augustin 2017)*.

எகிப்திய தெருஓவியச் செயற்பாட்டளராக பிரபலமாக அறியப்பட்ட *Omar Fathy* உடைய சுவரோவியத்தில் குறிப்பிடப்படும் வாசகங்கள் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கின்றன.

**"எழுதுகோலுக்கும், ஓவியத்தூரிகைக்கும் அச்சமடைகின்ற ஆட்சி,**
**பாதிக்கப்பட்டவர்களை தாக்குகின்ற அநீதியான கட்டமைப்பு,**
**நீங்கள் நியாயமானவர்களாய் இருந்திருந்தால் நான் வளர்வதையிட்டு அச்சமடையத் தேவையில்லை.**
**நீங்கள் செய்வதெல்லாம் சுவர்களுடன் சண்டையிடுவதே, ஓவியத்தின் மீது உங்களது அதிகாரத்தைக் காண்பிக்கின்றீர்கள்.**

எழில்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# சைப்பிரஸ் சிக்கலில்
## ஓர் புதிய திருப்பம்

மத்தியதரைப் பிரதேசத்தில் இம் மாதத் தொடக்கத்தில் நிலவிய கடும் பதற்ற நிலையின் நடுவில், வட சைப்பிரஸ், தனது அதிபருக்கான தேர்தலை நடத்தியிருக்கிறது. ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி தேசிய ஒற்றுமைக் கட்சியைச் சேர்ந்த (National Unity Party) ஏர்சின்டட்டார் (Ersin Tatar) பதவியில் இருக்கின்ற அதிபர் முஸ்ரபா அக்கிஞ்சிக்கு (Mustafa Akinici) எதிராகப் போட்டியிட்டு 51.74 வீதமான வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

நீண்ட காலமாகத் தொடர்கின்ற பல பிணக்குகளை உள்ளடக்கிச் 'சைப்பிரஸ் பிரச்சினை' என்ற பெயரில் அறியப்படுகின்ற சிக்கல் தொடர்பாக, கிரேக்க மக்களைக் கொண்ட சைப்பிரஸ் பகுதியோடு தமக்கு இருக்கின்ற கருத்து வேறுபாடுகளுக்கு எப்படிப்பட்ட தீர்வைக் காண்பது என்ற விடயம் சார்பாக மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைக்கு சைப்பிரசில் வாழும் துருக்கிய மக்கள் வழங்கிய ஆணையாகவே இந்தத் தேர்தல் முடிவுகள் பார்க்கப்படுகின்றன.

பிரித்தானியாவிடமிருந்து 1960 இல் சைப்பிரஸ் தனது சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது. ஆனால் அதற்குப் பின் நாட்டிலே, கிரேக்க சைப்பிரஸ் மக்களுக்கும், துருக்கிய சைப்பிரஸ் மக்களுக்கும் இடையே அரசியற் குழப்பங்களும், வன்முறைப் போராட்டங்களும் ஏற்பட்டதனால் 1963 ஆம் ஆண்டு இரு இனங்களையும் உள்ளடக்கிய குடியரசு இரண்டாகப் பிரிந்து, அதற்கு அடுத்த வருடம் ஐக்கிய நாடுகளின் அமைதிப்படைகள் அங்கு வரவேண்டிய தேவை ஏற்பட்டது.

இப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் காண்பதற்காக இரு இனங்களுக்கும் இடையே 1968ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் இன்றுவரை அவ்வப்போது தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கின்றன.

'அகிஞ்சி' தெரிவுசெய்யப்பட்டிருப்பின் அது, இரு வலயங்களைக் கொண்ட, இரு இனங்களை உள்ளடக்கிய ஒரு கூட்டாட்சியை அடையும் நோக்குடன் ஏற்கனவே தொடங்கப்பட்ட அதிக சவால்கள்அற்ற ஒருபேச்சுவார்த்தைச்செயன்முறையைத் தொடர்ந்து கைக்கொள்ளவே துருக்கியைப் பூர்வீகமாகக் கொண்ட சைப்பிரஸ் மக்கள் விரும்புவதாக பொருள் கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும்.

ஆனால் பெரும்பான்மையான துருக்கிய சைப்பிரஸ் மக்கள், டாட்டாரையே (Tartar) தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதன் மூலம் அவர்கள் பேச்சுவார்த்தை மேசையில் தமது பக்கத்தைப் பொறுத்தவரையில், தமது உரிமைகளை மிக ஆணித்தரமாக வலியுறுத்தக்கூடிய ஒரு அணுகுமுறையையே விரும்புகிறார்கள் என்பது தெளிவாகின்றது. உண்மையில் கூட்டாட்சியை அதிக விமர்சனக் கண்ணோட்டத்துடன் பார்க்கின்ற ஒரு அணுகுமுறையையும், பேச்சுவார்த்தை மேசையில் விட்டுக் கொடுக்காத ஒரு உறுதியான அணுகுமுறையையுமே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

புதிய அதிபர் எவ்வாறான பாதையைத் தெரிவு செய்தாலும், பல்வேறுபட்ட பங்காளிகளுடன்தொடர்புபட்ட மிகச்சிக்கலானபிரச்சினையாக இது இருக்கிறது என்பது மட்டுமன்றி, இப்பிரதேசம் முழுவதிலுமே அதிக பதற்றம் ஏற்படுவதற்கும் அமைதி முயற்சி தோல்வியடைவதற்கும் மூலகாரணமாக இருக்கின்ற, பத்து ஆண்டுகளாகத் தொடரும் இயற்கை வாயுப் பிரச்சினையும் இங்கே கருத்தில் எடுக்கப்படவேண்டிய ஒரு முக்கிய விடயமுமாகும்.

தமிழில் **ஜெயந்திரன்**

**டாட்டாரின் தலைமைத்துவம்;**

பன்னாட்டுச் சமூகத்தில் துருக்கியினால் மட்டுமே ஒரு நாடாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற வடக்கு சைப்பிரஸின் அரசியல் அரங்கில், தோல்வியிலே முடிந்த பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளைச் சந்தித்த விரக்தியுணர்வு மிக ஆழமாக வேரூன்றியிருப்பதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. கிரேக்க சைப்பிரஸ் பத்திரிகைகளினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பின்படி, தீவின் அரசியல் நிலைமை தொடர்பாக தாம் முழுமையாக நம்பிக்கை இழந்திருப்பதாக ஆய்வில் பங்கு பற்றிய 53.8 வீதமான துருக்கிய சைப்பிரஸ் மக்கள் கருத்துத் தெரிவித்திருந்தார்கள். அதே வேளையில் 24.7 வீதமான கிரேக்க சைப்பிரஸ் மக்களே இப்படிப்பட்ட நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தியிருந்தார்கள். கடந்த பெப்ரவரி மாதத்தில் கெசிச்சி (Gezici Research Company) என்ற துருக்கிய ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட கருத்துக்கணிப்பில் கிரேக்க சைப்பிரஸ் பகுதியுடன் எந்தவிதமான உடன்பாட்டையும் எட்டுவது சாத்தியமில்லை என்று 78.7 வீதமான துருக்கிய சைப்பிரஸ் மக்கள் கருத்து தெரிவித்திருந்தார்கள்.

தேர்தலுக்கு முன்னதாக, போட்டியிட்ட எல்லா வேட்பாளர்களைப் போலவே, டாட்டாரும் மக்கள் நடுவில் நிலவிய இந்த விரக்தியுணர்வைக் கையில் எடுத்திருந்தார். பேச்சுவார்த்தையைத் தொடர வேண்டும் என்றும் பன்னாட்டுச் சமூகத்தின் அனுதாபத்தை இழக்காமல் இருக்கும் பொருட்டு கடும்போக்கு அணுகுமுறையைத் தவிர்த்துக் கொள்ளவும் வேண்டும் என்று அவரது எதிராளி பரப்புரை செய்தபோது, தேக்க நிலையிலே இருக்கின்ற பேச்சுவார்த்தைக்கு முன்னுரிமை தந்து இன்னும் ஐந்து ஆண்டுகளை வீணாக்கிவிட முடியாது என்றும் அபிவிருத்தியில் கவனம் செலுத்துவதே முக்கியமானது என்றும் டாட்டார் வலியுறுத்தியிருந்தார்.

பன்னாட்டு சமூகத்தின் அங்கீகாரத்தையும் ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்புரிமையையும் உறுதிப்படுத்தும் நோக்குடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வைக் காணும் அணுகுமுறையை பல ஆண்டுகளாக துருக்கிய சைப்பிரஸ் கைக்கொண்டு வந்திருக்கிறது. ஆனால் இவ்வகையான அணுகுமுறை கிரேக்க சைப்பிரஸ் பகுதியுடன் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பேச்சுவார்த்தையில் அடைவதற்கு எந்தவிதத்திலும் உதவியாக அமைந்திருக்கவில்லை.

துருக்கியுடன் நல்லுறவைப் பேணுவதும் தனது தேர்தல் பரப்புரையில் டாட்டார் வலியுறுத்திய இன்னொரு விடயமாகும். மேற்குறிப்பிட்ட கெசிச்சி ஆய்வின்படி, 61வீதமான துருக்கிய சைப்பிரஸ் மக்கள், துருக்கியுடன் நல்ல உறவைப் பேணுகின்ற ஒரு அதிபரை விரும்பியிருக்கிறார்கள். அதே நேரத்தில் 80.8 வீதமான மக்கள் வடக்கு சைப்பிரசின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய ஒரு நாடாக துருக்கி விளங்க வேண்டும் என்றும் விரும்பியிருக்கிறார்கள்.

சைப்பிரஸ் குடியரசை 1960 இல் தாபித்த உடன்படிக்கைகளின்படி துருக்கி, கிரேக்கம், ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகள் மேற்படி குடியரசின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பையும் அதே வேளையில் குறிப்பிட்ட தீவில் ஏற்படுத்தப்பட்ட குடியரசுக்கு ஆபத்து ஏற்படும் சூழலில் அதில் தலையிட்டு அமைதியை ஏற்படுத்தும் பொறுப்பையும் ஏற்றிருந்தன. மேற்படி சைப்பிரஸ் தீவை கிரேக்கத்துடன் இணைக்கும் நோக்கத்துடன் கிரேக்கத்தின் ஆதரவுடன் 1974இல் ஒரு ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி நடைபெற்ற போது, துருக்கி இந்த ஏற்பாட்டைப் பயன்படுத்தியிருந்தது. சைப்பிரஸ் குடியரசின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்க ஏற்படுத்தப்பட்டிருக்கும் மூன்று நாடுகளைக் கொண்ட இந்த ஏற்பாடு, காலம் கடந்த ஒரு விடயம் எனக்கூறி அதனை இல்லாமற்செய்துவிட கிரேக்க மக்களைக் கொண்ட சைப்பிரஸ் பகுதி விரும்புகிறது.

மாற்றத்தை எதிர்பார்த்த மக்களின் உதவியோடு வெற்றிபெற்ற டாட்டாருக்கு, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை இப்போது இருக்கிறது.

கூட்டாட்சிக்குப் பதிலாக மாற்றுத் தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய டாட்டார், அருகருகே இருக்கக்கூடிய 'இரண்டு அரசுகள்' என்ற தீர்வை தற்போது முன்வைத்திருக்கிறார். வடக்கு சைப்பிரஸ் பன்னாட்டுச் சமூகத்தால் இன்னும் அங்கீகரிக்கப்படாவிட்டாலும் கூட, நடைமுறையில் சைப்பிரஸ் தீவில் உண்மையில் இரண்டு அரசுகள் இருக்கின்றன. எனவே பேச்சுவார்த்தைகள் இந்த யதார்த்தத்தின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட வேண்டும் என்று டாட்டார் தெரிவித்திருக்கிறார்.

'இறைமைச் சமத்துவம்' (sovereign equality) என்ற கொள்கையை முன்மொழிந்திருக்கும் டாட்டார், இதன்படி துருக்கிய சைப்பிரசுக்கு அதிகப்படியான அதிகாரப்பரவலாக்கலைக் கோருகிறார். தமது பிரச்சினைகளுக்கானதீர்வு 'நாடுகளின்கூட்டு' (confederation) என்ற வடிவில் அமைய வேண்டும். அதாவது கூட்டாட்சிக்குப் பதிலாக அங்கீகரிக்கப்பட்ட இரண்டு நாடுகளின் கூட்டு என்ற வகையிலேயே தீர்வு அமையவேண்டும் என்று அவர் தெரிவித்திருக்கிறார். வடக்குசைப்பிரசைப் பன்னாட்டுச் சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்றால் அதற்கு கிரேக்க சைப்பிரசின் இசைவு அவசியமாகும். ஆனால் கிரேக்க சைப்பிரசைப் பொறுத்த வரையில் இது அவர்களால் நினைத்துப்பார்க்க முடியாத ஒரு விடயமாகவே இருக்கிறது.

இதே நேரம் துருக்கியின் ஒரு பகுதியாக மாறுவது என்பது பெரும்பாலான துருக்கிய சைப்பிரஸ் மக்களின் விருப்பத்துக்குரிய தெரிவாக இல்லை. டாட்டார் கூட இதைப்பற்றி எதுவும் பேசவில்லை. தமது தனித்துவமான அடையாளம்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## தெரு ஓவியம் ... தொடர்ச்சி...

**ஆனால் உங்களுடைய அகத்தில் கோழைகளாய் உள்ளீர்கள்,**
**நீங்கள் அழிக்கப்பட்டது எதையும் மீளக் கட்டவில்லை".**



மேற்கூறப்பட்ட வார்த்தைகள் ஆட்சியாளர்களைப் பாதுகாக்கும் பாதுகாப்புப் படைக்கட்டுமானத்தை கேள்வி கேட்பதாக எழுதப் பட்டது.

மேற்குறிப்பிட்ட தெரு ஓவியம் பலமுறை வரையப்பட்டதும், தொடர்ந்து தற்கால அரசியலுக்கேற்ற முறையில், அதிகார சிக்கலைப் பிரதிபலிக்கும் வகையில் தொடர்ந்தும் மாற்றத்திற்குள்ளாகி வருகின்றது *(S.H.Awad 2017)*. *Holly Eva Ryan (2013)* தன்னுடைய முனைவர்பட்ட ஆய்வில் பிரேசில், ஆர்ஜென்டீனா, பொலிவியா நாடுகளில் உள்ள தெரு ஓவியங்களை குறிப்பாக தெரு ஓவியங்களின் பங்களிப்பு பற்றிய பகுதிகளில், அடக்குமுறைக்கெதிராக தெரு ஓவியர்கள் அடக்கு முறைக்கு எதிரான ஓவியங்களை மையப்படுத்தி, இயக்கமாக்கி, குழுக்களானார்கள் என்பதற்கு உதாரணமாக *Circulo 70*ஐ குறிப்பிடலாம். அடக்குமுறைச் சொல்லாடலுக்கு அல்லது மேலாண்மைச் சொல்லாடலுக்கு மாற்றீடான சொல்லாடலை தங்களது ஓவியங்கள் மூலம் கட்டமைத்தார்கள் *(Ibid)*. *Circulo 70* குழுமம் பெரும்பாலும் இளைய தலைமுறை தெரு ஓவியர்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்டிருந்தது. இவர்களுடைய இலக்குகளில் ஒன்றாக, பார்வையாளர்களுக்கு தொடர்ந்தும் மாற்றுவழிகளைப் பற்றி சிந்திக்க தூண்டு வதாகவும் அதேவேளை 'சமூக மாற்றம்' ஒரு யதார்த்தம் எனும் நம்பிக்கையைத் தொடர்ந்து கொடுப்பதாகவும் அமைந்திருந்தது.

தெரு ஓவியங்கள் ஏற்படுத்துகின்ற விளைவுகள், (தனி நபரிலும், கூட்டுக் குழுமத்திலும்), -தேடலும் தெரிதலும்- அது ஏற்படுத்தும் உணர்வுகளும் அரசியலே *(Ahmed 2014)*. கலாச்சார எதிர்ப்பியங்கியலின் அடிநாதமாக விளங்குவது உணர்வுகளே *(Horhager 2017)*. தெரு ஓவியங்கள் என்ன என்பதற்குப் பதிலாக அவை என்ன செய்கின்றன என்ற கேள்வியை *Ahmed (2014)* எழுப்ப விரும்புகின்றார். இவ்வாறு எழுப்பப்படும் உணர்வுகள் மீது யர் தேசியத் தளத்தில் ஆராயப்பட வேண்டும்.

'நாட்டிற்கானபற்று உணரப்படுதல் என்பது, பற்று என்பது இங்கே மூலதனமாக இருக்கின்றது, அது மீளவும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும், மற்றவர்களாலும் தீங்கிழைக்கப்பட்டதை அல்லது அநீதி செய்யப்பட்டதை உணர்தலாகும், எப்போதெனில் எனக்கானதை மற்றவர்கள் வலிந்தெடுக்கும் போது *''To feel love for this nation,whereby love is an investment that should be returned, is also to feel injured by those others, who are 'taking' what is yours (Ahmed 2014). 2014). Fuery (2003)* ஐப் பொறுத்தவரை காட்சியியல் கலாச்சாரமும் *Visual culture)*, திறனாய்வுக் கோட்பாடும் *(Critical theory)* ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்க முடியாது. காட்சியியல் கலாச்சாரமும், கலாச்சாரப் படைப்பும், கற்பித்தலுக்குரிய உத்தியாக, (குறிப்பாக ஓவிய பார்வையாளர்கள் தொடர்பில்), விழிப்புணர்வு, விளங்குதல், செயற்படுதல் போன்றன சமூக – அரசியல் தளத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும் *(Horhager 2019)*.

இஸ்ரேலிய காலனித்துவ அடக்குமுறைக்கெதிராக காசா பெருஞ்சுவர் ஒரு போராட்டக்களமாகவே உருவாக்கப்பட்டு விட்டது. பலஸ்தீனியர்களுக்கு தெரு ஓவியம் அவர்களுடைய தேசத்திற்கான வேர்களைத் தேடுகின்ற உத்தியாகவும் அதே நேரத்தில் சர்வதேசத்தை நோக்கி அவர்களது அடக்கு முறை தொடர்பில் நியாயப் பிரச்சாரத்திற்கான கருவியாகவும் பயன்படுத்தப்படுகின்றது *(Ibid)*.



'அவர்களுடைய ஆட்டிலறிப் பீரங்கிகள் எங்களுடைய வேர்களைக் கொல்ல முடியாது *(Their Artillery Can't Kill Our Roots)*' 'இருப்பது எதிர்ப்பதற்காக'*(To Exist is to Resist)* போன்ற வாசகங்கள் பலஸ்தீனியத் தன்மையை தக்கவைத்துக் கொள்ள உதவி செய்கின்றன.

வடக்கு – கிழக்கிலும் 'ஈழத்தமிழ்த் தன்மையை'*(Eelam Tamilness)* தக்க வைத்துக் கொள்ளவும் ஆழப்படுத்தவும், அடக்குமுறை எதிர்ப்பியங்கலுக்கும் தெரு ஓவியங்களின் அவசியம் உணரப்படுகின்றது. ஈழத்தமி ழ்த்தன் மையைப் பிரதிபலிக்கக்கூடிய, எதிரொலிக்கக்கூடிய தெரு ஓவியங்கள் ஏற்கனவே கூறப்பட்ட அடக்குமுறைத் தினசரித் தன்மையை பிரதிபலிப்பதோடு தமிழ்த் தேசக் கட்டுமானக் கட்டமைப்பிற்கு பங்களிப்புச் செய்வது காலத்தின் கட்டாயமாக உணரப் படுகி ன்றது. ஈழத்தமி ழ்த்தன்மை தான் வடக்கு – கிழக்கு,புலம் பெயர் மக்களின் ஏன் மலையக மக்களின் பொதுக் குவிமையமும் கூட. அந்தப் பொதுக் குவிமையத்தின் இயங்குதன்மையை கொதிநிலையில் வைத்திருக்க வேண்டும் என்றால், தெரு ஓவியங்கள் மீள எழுச்சி பெற உதவுவதன் மூலமும் சமூக இயக்கமாக அவற்றை அணி திரட்டுவதன் மூலமுமே தான் எதிர்ப்பியங்கலை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியும்.

• • •

## 7 தமிழர்கள் விடுதலை ... தொடர்ச்சி..

யின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

இவர்களுடன், தமிழர் பேரியக்கத்தின் செயலாளர் கி. வெங்கட்ராமன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா போன்றோரும் இவர்களின் விடுதலைக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்துள்ளனர்.



இதேவேளை, பிரபலங்கள் சிலர் இவர்க ளின் விடுதலை குறித்து தங்கள் ருவிற்றர் பக்கங் களில் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எழுவர் விடுதலைக்கு யார் தடை என்பது ஆளுநருக்கே தெரியும் என்று கவிஞர் வைரமுத்து ருவிற்றரில் பதிவிட்டுள்ளார்.

தொல். திருமாவளவன் தனது ருவிற்றர் பதிவில், ஆளுநரின் தாமதத்தைக் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது உச்சநீதிமன்றம். எழுவரின் விடுதலை தொடர்பாக ஆளுநர் விரைந்து முடிவெடுக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தியுள்ளது. மத்திய அரசின் சைகை இல்லாமல் ஆளுநர் அசைய மாட்டார். *தமிழக அரசே அவர்களை விடுதலைசெய்!* என்று பதிவிட்டுள்ளார்.

பேரறிவாளன்உள்ளிட்ட7பேரைவிடுதலை செய்வதில் காங்கிரஸுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும், சட்டம் என்ன சொல்கிறதோ அதனை ஏற்றுக்கொள்வோம் என்றும் அந்த கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி எதிர்ப்புத் இதற்கு தெரிவித்துள்ளார். ''பேரறிவாளன் உள்பட 7 பேரை விடுதலை செய்யும் படி அரசியல் கட்சியினர் கோருவது ஏற்புடையது அல்ல. முன்னாள் பிரதமரை கொலை செய்து இந்தியாவிற்கு கேடு விளைவித்தோருக்கு பரிந்து பேசுவது தமிழர் பண்பாடாகாது. கொலை குற்றம் செய்தவர்களை குற்றவாளிகள் என்றுதான் கருத வேண்டுமேதவிர, தமிழர்கள் என அழைப்பது சரியல்ல. ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் உள்ள 7 பேர் விடுதலையை நீதிமன்றம் அறிவித்தால் ஏற்றுக்கொள்வோம்.'' என்று கூறியுள்ளார்.

• • •

## சிங்கள பௌத்த ... தொடர்ச்சி..

மகாவலி எல் வலையத்திற்குள்தான் இந்தப் பகுதிகள் வருகின்றன. இது இப்படியே பரவலடைந்தால், முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டுவரும் சிங்கள குடியேற்றங்களுடன் விரைவில் இணையும். அவ்வாறு இணையும் போது, வவுனியாவிலிருந்து கொக்கிளாய் முகத்துவாரம் வரையில் குறுக்காகப் பெரியதொரு சிங்கள குடியேற்றம் அமையும். அது தனியான நிர்வாக அலகாகவும், தேர்தல் காலங்களில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் தந்திரமாகவும் மாறும். இந்தப் பகுதிகளில் தனியான நிர்வாக அலகுகள் உருவாக்கப்படும் வேலைத் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## கொழும்புத் துறைமுக ... தொடர்ச்சி..

ஆனால், தற்போது காணப்படும் கொரோனா பரவலும், நடைமுறையிலிருக்கும் தனிமைப்படுத்தல் சட்டமும், மக்கள் கூடுவதற்கோ ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப் பதற்கோ இடமளிக்காது. அதேவேளையில், 20ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதிக்குக் கிடைத்திருக்கும் அதிகாரங்களும் இதனை முன் னெடுப்பதற்கான பலத்தை கோட்டாபயவுக்குக் கொடுக்கும்.

கிழக்கு முனையம் கிடைத்திருப்பதால் திருப்தியடையும் புதுடில்லி, அடுத்ததாக என்னத்தைக் கோட்டை விடப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

## சைப்பிரஸ் சிக்கலில் ... தொடர்ச்சி...

தொடர்பாகவும் தமது சுதந்திரம் தொடர்பாகவும் துருக்கிய சைப்பிரஸ் மக்கள் அசைக்க முடியாத உறுதியோடு இருக்கிறார்கள்.

ஏற்கனவே 1977 இற்கும் 1979க்கும் இடையேயான காலப்பகுதியில் எட்டப்பட்ட உயர்மட்ட உடன்படிக்கைகளில்; குறிப்பிடப்பட்டிருப்பது போன்று, கூட்டாட்சித் தீர்வொன்றை எட்டுவதை இலக்காகக் கொண்டு, பல ஆண்டுகளாக வடிவமைக்கப்பட்ட அமைதிப்பேச்சுவார்த்தைகளோடு டாட்டாரின் எதிர்பார்ப்பு எப்படிப் பொருந்தும் என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. இரண்டு இனங்களுக்கும் இடையே அரசியல் சமத்துவத்தைப் பேணும் வகையில் இரண்டு அரசுகளை உள்ளடக்கிய, இரு வலயங்களைக்கொண்ட இரு இனங்களைக் கொண்ட, ஆனால் பன்னாட்டு ரீதியில் ஒரு அலகாக விளங்கக்கூடிய ஒரு தீர்வே இப்பேச்சுவார்த்தைகளின் போது முன்வைக்கப்பட்டது. இருப்பினும் ஒரு முழுமையான தீர்வைக் காணும் முயற்சியில் இரு பக்கங்களுமே தோல்வியைக் கண்டிருக்கின்றன.

### மிகவும் சிக்கல் வாய்ந்த பின்னணி

துருக்கி மற்றும் கிரேக்க சைப்பிரஸ் மக்களுக்கிடையேயான பிணக்குகளுக்கு அப்பால், இதில் தொடர்புபட்ட வேறு பல தரப்புகளின் காரணமாகவும் சைப்பிரஸ் பிரச்சினை மேலும் சிக்கலாக்கப்பட்டிருக்கிறது. துருக்கி, கிரேக்கம், பிரித்தானியா மற்றும் ஐக்கிய நாடுகள் என்பன தொடக்கத்தில் இருந்தே சைப்பிரஸ் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சிக்குத் தங்கள் பங்களிப்பை அளித்துவந்திருக்கின்றன.

தெற்கு சைப்பிரஸ், ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்த போது, ஐரோப்பிய ஒன்றியம் இப்பிரச்சினையில் தலையிடத் தொடங்கியது. சைப்பிரசின் இரு பகுதிகளும் ஒன்றாக இணைவது தொடர்பாக ஐக்கிய நாடுகளினால் 2004ம் ஆண்டு நடத்தப்பட்ட பொதுவாக்கெடுப்பில், துருக்கி தேசத்தின் ஆதரவுடன் துருக்கிய சைப்பிரஸ் (கிரேக்க சைப்பிரசுடன்) ஒன்றாக இணைய வாக்களித்தது. ஆனால் அதே நேரம் கிரேக்க சைப்பிரஸ் இந்த ஒன்றிணைவுக்கு எதிராக வாக்களித்தது. இதன் காரணமாக வட சைப்பிரஸ் (துருக்கிய சைப்பிரஸ்) ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையவில்லை.

சைப்பிரஸ் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தீர்க்க முடியாத மிகச் சிக்கலான விடயமாக விளங்குவது சைப்பிரஸ் தீவுக் கரையோரங்களில் காணப்படும் இயற்கைவாயு தொடர்பான கண்டுபிடிப்புகளாகும். இவ்விடயம் இப் பிரச்சினையின் பன்னாட்டுத்தன்மையை அதிகப்படுத்தியிருக்கிறது. சாதகமாகக்கூடிய வணிக அபிவிருத்திப் பாதைகள், எதிர்காலத்தில் பெறக்கூடிய வருமானங்களைப் பங்கிடுவது தொடர்பான பிணக்குகள், இரு பகுதிகளும் உரிமை கொண்டாடும் கரையோர எல்லைகள் போன்றவற்றின் காரணமாக குறிப்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த ஏனைய பங்காளிகளும் அத்துடன் பன்னாட்டு எண்ணெய், வாயு நிறுவனங்களும் இப்பிணக்குகளுக்குள் ஈர்க்கப்பட்டிருக்கின்றன.

பிரான்சு, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய இரு நாடுகளும் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக துருக்கி, பிரான்சு, அமீரகம், போன்ற நாடுகளுக்கு இடையே பிணக்குகள் ஏற்படுகின்றன. கிரேக்க சைப்பிரஸ் மீது இதுவரை விதித்திருந்த தமது ஆயுதத் தடையை அமெரிக்கா அண்மையில் நீக்கியிருக்கிறது.

இயற்கை வாயு தொடர்பான விடயம் பேச்சுவார்த்தைகளின் போது வெளிப்படையாகப் பேசப்படாவிட்டாலும், இவ்விடயம் பகைமை, நம்பிக்கையீனம், பழிக்குப்பழிவாங்கும் செயற்பாடுகள் என்வற்றைத் தோற்றுவித்து, அமைதி முயற்சிக்கு குறிப்பிடத்தக்க இடையூறை ஏற்படுத்தியிருக்கிறது. ஐக்கிய நாடுகளின் முன்னாள் விசேட ஆலோசகர் எஸ்பன் பாத் ஐட் (Espen Barth Eide) குறிப்பிட்டது போன்று 'சைப்பிரஸ் பிரச்சினையுடன் ஐதரோ காபன் (hydrocarbons) விடயமும் இணைக்கப்பட்டுவிட்டது. இனிமேல் அதனைப் பிரிக்க முடியாது".

இயற்கை வாயு விடயத்தில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் இருக்கும் வழமையான தடைக்கற்கள் தொடர்ந்து இருக்கத்தான் செய்கின்றன. சொத்துகளுக்கு உரிமை கோருதல், பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்படக்கூடிய விட்டுக்கொடுப்புகள், கூட்டாட்சி அதிகாரப்பகிர்வு உடன்படிக்கைகள், பாதுகாப்பு உத்தரவாதம் தொடர்பான ஒப்பந்தங்கள், ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவுகள் மற்றும் பொருண்மியம் தொடர்பான விடயங்கள் என்ற ஆறுவகையான விடயங்களில் ஐக்கிய நாடுகளினால் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

'எல்லா விடயங்களிலும் உடன்பாடு எட்டும் வரை எந்தவொரு உடன்பாடும் இல்லை" என்ற கொள்கையின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இதன்படி அனைத்தையும் ஒருசேர உள்ளடக்கும் ஒரு முழுமையான ஒப்பந்தத்துடன் இந்த ஆறு கோப்புகளுமே முடிவுக்குக் கொண்டுவரப் படவேண்டுமேயொழிய ஒரு குறிப்பிட்ட விடயத்தோடு மட்டும் தொடர்பான எந்தவித பகுதி உடன்படிக்கையும் இறுதிசெய்யப்படமாட்டாது. பேச்சுவார்த்தையில் நின்று விலகி, பேச்சுவார்த்தை மேசையில் தமது கரங்களை வலுப்படுத்துகின்ற தமக் குச் சாதகமான சூழல் ஏற்படும் வரை காத்திருக்க இரு பக்கங்களையும் இது தூண்டியிருக்கிறது.

தெற்கையும் வடக்கையும் சேர்ந்த இந்த இரு அரசுகளுக்கும் இடையே ஏற்படக்கூடிய எந்தவிதமான உத்தியோகபூர்வ ஒத்துழைப்பும் தவிர்க்கப்பட்டிருக்கிறது. இப்படி நிகழ்ந்தால் அது வடக்கை அங்கீகரிக்கின்ற ஒரு செயற்பாடாக மாறி விடலாம் என்றும் சமரசம் செய்வதற்கான வாய்ப்புகள் அனைத்தும் அதனால் அற்றுப்போய் விடலாம் என்ற அச்சமும் ஒத்துழைப்புத் தவிர்ப்புக்குக் காரணமாகியிருக்கிறது.

இதற்குப் பதிலாக பண்பாட்டுப் பாரம்பரியத்தை மீளப்புதுப்பித்தல், போரில் காணாமற் போனவர்களைத் தேடுகின்ற செயற்பாடு, பொதுச் சுகாதாரம் போன்ற விடயங்களில் இணைந்து செயற்படுகின்ற இரு இனங்களையும் உள்ளடக்கிய செயற்பாட்டுக் குழுக்கள் போன்றவை உருவாக்கப்பட்டிருக்கின்றன. மேற்குறிப்பிடப்பட்ட முயற்சிகள் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் உள்ள அடிப்படை விடயங்கள் தொடர்பாகக் குறிப்பிட த்தக்க முன்னேற்றம் எதனையும் ஏற்படுத்தவில்லை.

பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்குவதற்கான முன்னேற்பாடுகளை ஐக்கியநாடுகள் தற்போது மேற்கொண்டுவருகிறது. "சைப்பிரஸ் பிரச்சினைக்கான தீர்வை நோக்கி ஐக்கிய நாடுகளின் தலைமையில் நடை பெறுகின்ற முயற்சிகள் மிக விரைவாக முன்னெடுக்கப்பட வேண்டும்" என்று கூறி, ஐரோப்பிய ஒன்றியம் இந்த முயற்சிக்கான தனது ஆதரவை வெளிப் படுத்தியிருக்கிறது. துருக்கியின் தலைநகரமான அங்கரா (Ankara) பல தரப்புகளை உள்ளடக்கிய ஒரு மாநாட்டை இது தொடர்பாக நடத்த இருப்பதாக டாட்டாரும் தெரிவித்திருக்கிறார். ஆனால் இதற்கு கிரேக்க சைப்பிரஸ் பிரிவினர் இணங்குவார்களா என்பது இன்னும் தெளிவாகவில்லை.

சைப்பிரஸ் பிரச்சினைக்கான தீர்வைக் காண முன்னெடுக்கப்பட்ட முயற்சியில் தோல்வி மற்றும் அவநம்பிக்கை என்பவை தொடர்பாக ஒரு நீண்ட வரலாறு இருக்கின்ற பொழுதிலும், இது வெற்றியடையலாம் என்றும் ஒரு சிறு நம்பிக்கையும் இருக்கத்தான் செய்கிறது. சைப்பிரசில் நிலைகொண்டிருக்கும் தனது துருப்புகளின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் பாதுகாப்பு விடயத்தில் ஒரு விட்டுக்கொடுப்பைச் செய்வதற்கு 2017இல் துருக்கி வெளிப்படையாகச் சம்மதம் தெரிவித்த போது இரண்டு பகுதிகளுமே ஒரு தீர்வுக்கு மிக அருகாக வந்திருந்தன.

பாதுகாப்புத் தொடர்பாக துருக்கி அளிக்கும் உத்தரவாதத்தைக் கைவிடுவது சார்பாக டாட்டார் எந்த வாக்குறுதியையும் கொடுக்காத பொழுதிலும் துருக்கியின் விருப்பு இன்னும் செல்லுபடியாகக்கூடிடதொன்றாகவே கருதப்படுகின்றது.

இக்குறிப்பிட்ட பிரதேசத்தில் எல்லோரதும் அமைதியின்மைக்குக் காரணமான இப்பிரச்சினையை இல்லாமற் செய்யக்கூ டியவிதத்தில், மிக நீண்ட காலமாகத் தொடருகின்ற இந்தப் பிணக்குடன் தொடர்புபட்ட பங்காளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து அனைவருக்கும் திருப்தியை அளிக்கக்கூடிய ஒரு தீர்வை இறுதியில் எட்டுவார்களா என்பதற்குக் காலம் தான் விடை சொல்ல வேண்டும்.

• • •

## கொரோனா நெருக்க ... தொடர்ச்சி..

இருந்து நாட்டைப் பாதுகாக்க முடியாமல் போனமையே ராஜபக்சக்களின் அரசியல் அதிகார மீள்வருகைக்கு உந்து சக்தியாகியது. தேசிய பாதுகாப்பை உறுதி செய்து நாட்டை அழிவில் இருந்து பாதுகாப்போம் என்ற ஆணையே ராஜபக்சக்களை தேர்தல்களில் வெற்றிபெறச் செய்தது. சிங்கள பௌத்த தேசியம் என்ற தனி இனத்தேசிய இனவாத கோஷ மும் இதற்குத் துணை புரிந்தது.

தேசிய பாதுகாப்பு என்பது நாடு பிளவுபடுவதைத் தடுத்து, நாட்டின் ஆட்புல ஒருமைமையைப் பாதுகாப்பது மட்டுமல்ல. ஆயுத ரீதியாக மட்டுமல்லாமல் எந்த வழியிலும் நாட்டு மக்கள் கொல்லப்படாமல் பாதுகாப்பதும் அதன் முக்கிய பொறுப்பாகும். நல்லாட்சி அரசாங்கத்தைப் போலல்லாமல் தேசத்தைப் பாதுகாப்போம், தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்துவோம் என்று சூளுரைத்த ராஜபக்சக்கள் கொரோனா வைரஸ் என்ற கோர அரக்கனிடம் இருந்து மக்களைப் பாதுகாக்க முடியாமல் தவிக்கின்றனர்.

அதன் தாக்கத்தினால் தேச மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை - தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பைத் தடுப்பதற்கு முதலாவது அலையில் செயற்பட்டது போன்ற செயற்பாட்டை அரச தரப்பிடம் காண முடியவில்லை. மாறாக அந்த அரக்கனுடன் சமரசம் செய்து கொண்டு வாழப்பழகிக் கொள்ளுங்கள் - வாழுங்கள் என்று அறிவுரை வழங்கியுள்ளதன் மூலம், மக்களைப் பாதுகாக்கின்ற தனது தலையாய பொறுப்பை அரசு கைகழுவி விட்டிருப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

## இலங்கையில் அதிகரி ... தொடர்ச்சி...

ஜாஎல, கொழும்பு, மஹர, கொட்டாஞ்சேனை, மாளிகாவத்தை, கணேமுல்ல மற்றும் வெல்லம் பிட்டி ஆகிய பகுதிகளிலேயே இதுவரையில் மரணங்கள் பதிவாகியுள்ளன.

இலங்கையில்இதுவரையில்கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 415ஆக அதிகரித்துள்ளது. மேலும் இது வரை ஏழாயிரத்து 723 பேர் இந்த தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 662 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# விசமில்லா விவசாயம்

**விதுஜா.வேலம்புராசன்**
மூன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு,
சமூகவியல் துறை கலைப்பீடம்

உலகை உள்ளங்கையில் கொண்டு வந்தாலும், உணவை உள்ளங்கையில் கொண்டு வர விவசாயியினால் மட்டுமே முடியும்.

***பட்டி பெருக வேணும் தம்பிரானே!***
***பால்ப்பானை பொங்க வேணும் தம்பிரானே !***
***மேழி பெருக வேணும் தம்பிரானே !***
***மாரி மழை பெய்ய வேணும் தம்பிரானே !***

என மழை சிறப்பாக பெய்ய வேண்டும் என வருண பகவானை வணங்கி, மேற்கொள்ளும் விவசாயத்தை, உயிராய் கருதிய எமது மூதாதையர் விட்டுச்சென்ற பாதையில் வளர்ந்து வருகின்ற சிறு மொட்டுக்களாகிய எமக்கு முன்னோர்கள் தடம் பதித்த விவசாயம் பற்றி தெரியவில்லை எனில், எமது பிற்கால சந்ததியினருக்கு விவசாயம் என்பது இரண்டாம் மொழி போன்றே தென்படும். காலை சேவல் கூவியதும் வீட்டை விட்டு வெளியேறும் விவசாயி, சேற்று வயல் மிதித்து, நாற்று நட்டு மனைவியின் கையால் கொடுக்கும் ஒரு வயிறு பழஞ் சோறினையும், பச்சை மிளகாயினையும் உண்டு விட்டு மீண்டும் மண்வெட்டியைத் தூக்கிக் கொண்டு செல்லும் போது கிடைக்கும் ஒரு வித ஆனந்தம்.



இன்று கூலி ஆட்களை வைத்து வேலையை முடித்துவிட்டு ஏசி பூட்டிய வாகனத்தில் அமர்ந்து வெய்யில்படாமல் சென்று இறங்கிய இடத்திலேயே நின்றுகொண்டு வயலை ஒரு முறை பார்வையிட்டு விட்டு தனியார் நிறுவனங்களுக்கு கூலி வேலைக்கு செல்லும் இன்றைய தலைமுறையினருக்கு ஒருபோதும் இந்த இனிமை கிடைத்து விடாது.

உழவனின் வியர்வைத் துளி சிந்தி நெல் விளைந்த காலம் போய், பணத்தின் வாடை பட்டு நெல் விளையும் காலமாயிற்று.

***காவேரி ஓரத்திலே***
***கால் பதிக்கும் ஈரத்திலே***
***காலையிலே நான் நடப்பேன்***
***கட்டழகி நீ வருவே***
***விதையை கொண்டுகிட்டு – நெல்லு***
***விதையை கொண்டுகிட்டு***
***வாய்க்கா வெட்டின களைப்பிலே – நான்***
***வந்து குந்துவேன் வரப்பிலே – புது***
***மஞ்சள் நிறத்திலே கொஞ்சும் முகத்திலே***
***நெஞ்சை பறித்திடும் வஞ்சிக் கொடி நீ***
***கஞ்சி கொண்டு வருவே - இன்பம் கலயத்திலே தருவே***

என்று கலப்பையை தோள் மீது வைத்து களைப்புடன் உழவு வேலை செய்யும் விவசாயி, அவனுக்கு அன்புடன் கஞ்சி கொண்டு செல்லும் மனைவி. அதிகாலையில் எழுந்து அவசரம் அவசரமாய் ஒரு உப்பில்லாத உணவினை சமைத்தெடுத்து அதனை கணவனுக்கும், தனக்கும் பிரித்து எடுத்துக்கொண்டு தொட்டிலில் அழுதுகொண்டே படுத்திருக்கும் குழந்தையை தூக்கி பக்கத்து வீட்டில் விட்டு விட்டு, கணவன் ஒரு புறம் மனைவி ஒரு புறமுமாய் வேலைக்குச் சென்று வரும்இன்றைய ஆண், பெண்களுக்கு விவசாயமும், அதில் ஒழிந்திருக்கும் சிறு சிறு மகிழ்ச்சியும் எங்கே தெரிந்துவிடப் போகின்றது. ஏர் பூட்டி விவசாயம் செய்த காலத்தில் அயல் நாட்டின் வறுமை போக்கிய எம் நாடு; எப்



பொழுது உழவு இயந்திரத்தில் கை பிடித்ததோ அப்பொழுதே எமது நாட்டு பஞ்சம் தீர்க்க அயலவர் கைகளை ஏந்தி நிற்கும் நிலை ஏற்பட்டது. பரம் பரை விவசாயிகள் என்று கொலரை தூக்கி விட்டு பெருமைப்பட்ட காலம் போய், விவசாயி மகன் என்று சொல்லிக்கொள்ளவே வெட்கப்படுகின்றனர் இன்றைய கால இளைஞர்கள். இருப்பினும் ஒன்றை அவர்கள் மறந்து போய் விட்டனர். எங்கேயோ ஒரு இடத்தில் யாரோ ஒரு விவசாயி சேற்றில் கால் வைப்பதனால் தான், இன்று எம் தட்டுக்களிலும் வயிறுகளிலும் ஒரு பருக்கை சோறேனும் செல்கின்றது.

ஆடு, மாடு, கோழிகளின் விலங்குக் கழிவுகளையும் வைக்கோல், இலை, தழைகளையும் உரமாக இட்டு மாடுகளில் ஏர் பூட்டி விவசாயம் செய்வதெல்லாம் பழைய முறை என்று யாரோ சிலர் கூறியதைக் கேட்டு, வணிக முறையில் தயாரிக்கப்பட்ட செயற்கை உரங்களை தம்மிடம் இருக்கின்ற நகைகள், காணிகளை விற்று, அடைமானம் வைத்து, அவற்றை வாங்கி பயிர் செய்ய ஆரம்பித்த காலம் தொட்டு விவசாயிகள் தமக்குள் இருக்கும் திறன்களை தமக்குள்ளேயே பூட்டிக்கொண்டு, தமது ஆரோக்கியத்திற்கு தாமே தடைவிதித்துக் கொண்டனர். ஆனால் இன்று குறைவாக கருதி தூக்கிப் போட்ட இயற்கை உரங்களையே எம்மிடம் புதிய முறையில் அறிமுகப்படுத்தி நாமே அவற்றை அதிக விலை கொடுத்து வாங்கி விவசாயத்திற்கு பயன்படுத்தும்படி செய்து விட்டனர். பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்யும் குடும்பத்தில் பிறந்த பிள்ளை கூட இன்று வகுப்பறையில் அமர்ந்து விவசாய பாடத்தைக் கற்றுக் கொள்கின்றது.

பத்து மாதம் ஒரு தாய் தன் வயிற்றில் சுமந்து, தன் பிள்ளையை பெற்றெடுக்கும் பொழுது தான், அவள் தன் வாழ்வின் அர்த்தத்தினை உணர்கின்றாள். பிஞ்சுக் குழந்தையின் கைகள் அவள் கன்னம் தொடும் வேளையில் அவள் கொண்ட பிரசவவலி ஒரு நொடிப் பொழுதில் மறந்து போவதனைப் போன்று; இரவு பகலாக அரும் பாடுபட்டு



தூக்கம் இன்றி, உணவு இன்றி மழையிலும், வெயிலிலும் துவண்டுபோன விவசாயிக்கு காலைப் பொழுதினில் முத்து முத்தாக சிந்திய பனித்துளிகளின் பாரத்தினைத் தாங்காது தலை வணங்கி அவற்றினை ஏற்றுக்கொண்டு "பசும் பயிர்மேனிக்கு மணி மகுடமாய்" தூக்கக் கலக்கத்தில் எழுந்து வரும் விவசாயியை புன் சிரிப்புடன் வரவேற்க, ஆவலோடு நெல் மணிகளில் தன் முகம் புதைத்து நீண்ட மூச்சினை எடுத்துவிடும் விவசாயிக்கு அது வரை அவன் பட்ட அத்துணை துன்பங்களும் கணப்பொழுதினில் மறந்து போய் விடுகின்றது. கோடி கோடியாய் பண மழையில் புரண்டாலும் அந்த ஒரு நிமிட சந்தோசத்திற்கு இணையாகாது.

திக்குத் திக்காக சிதைந்திருக்கும் குடும்ப வாழ் வில் உழவர் திருநாள் என்று போற்றப்படும் தைத் திருநாளை மறக்காது நினைவு வைத்து வருடா வருடம் கொண்டாடும் எம் மக்களுக்கு உழவர்கள் பற்றியே மறந்து போய் விட்டது என்பது மறைக்கப்பட்ட உண்மையே. பரம்பரை பரம்பரையாய் விவசாயத்தை மேற்கொண்டவர்களின் வழி வந்த பிள்ளைகள், விவசாயிகளையும், விவசாய நிலத்தையும், வேற்றுக்கிரகவாசியாகவே காண்கின்றனர். காலில் பட்ட மாறாத காயங்கள்கூட மாறிப் போகும் சேற்று வயல்தனில் நாற்று நட இறங்கினால்; ஆனால் இன்று சேற்று வயலின் சிறிதளவு சேறு பட்டாலே தீண்டத் தகாதவை காலில் பட்டு விட்டதாகவே உணர்கின்றனர். சேற்று மண் மருந்தாக பயன்படுத்தப்பட்ட காலம் கடந்து, சேறு



பட்டதற்கு மருத்துவரிடம் செல்கின்ற காலம் இப்பொழுது. இப்படியே போனால், இருந்த இடம் கூட தெரியாது அழிவடைந்துகொண்டு செல்லும் சில வன விலங்குள் போன்று விவசாயமும் அழிவடைந்து போகும் என்பதில் ஐயமில்லை. மூடி இருக்கும் தமது கண்களில் இருந்து தமது கைகளை விலக்கி, என்று விவசாயத்தின் பெருமைதனை முழுமையாக உணர் கின்றனரோ அன்றைக்கு புதைந்து கிடக்கும் விவசாயிகளின் கனவுகளும் குறைந்து கொண்டு செல்லும். மக்களின் வாழ்க்கைக் காலமும் புத்துயிர் பெற்று ஆரோக்கியமான எதிர்காலத்தினை பெற முடியும்.

"வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பாது" என்பதற்கிணங்க எவ்வளவு காலம் கடந்தாலும் நாம் ஒரு நெல்லினை மண்ணில் போட்டால், அது பல நெற்கதிர்களை எமக்கு நிச்சயமாக வழங்கும்.

• • •